
# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர்.29 ] சௌமியஆண்டு மார்கழித்திங்கள் 10—1—70 [ இத



## தான்யலக்ஷ்மி

வரதாபய ஸம்யுக்தாம் கிரீட மகுடோஜ்வலாம் ।
அம்புஜம் சேக்ஷுசாலீம்வா கதலீபல த்ரோணிகாம் ।
பங்கஜம் தக்ஷவாமேது ததானம் சுக்லரூபிணீம் ।
க்ருபாமூர்த்திம் ஜடாசூடாம் ஸுகாஸன ஸமன்விதாம் ।
ஸர்வா லங்காரஸம்யுக்தாம் ஸர்வாபரண பூஷிதாம் ।
மதமத்தாம் மனோஹாரிரூபாம் தான்யச்ரியம் பஜே ।

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

என்னிடத்தில் நின்செயலே
இல்லையென்றால் யாதுறினும்
நின்னிடத்தில் யான்வேண்டல்
நிச்சயமே—என்னிடத்தில்
இன்மை உயிர்க்குயிர்நீ
யின்மை இருந்தியற்றின்
நன்மைதின்மைக் கேதுவோ
நான். (83)

ஆசிரியர் :

வித்துவான்
சோமசுந்தரத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :

மகாவித்துவான்
சி அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

# “ஞானசம்பந்தம்”

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 29 | 10-1-70 | இதழ் 2

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | வாழி தைப்பெண்! | ... 77 |
| 2 | பாவையும் பாவையரும் | ... 79 |
| 3 | அருள்நெறியும் அறநெறியும் | ... 83 |
| 4 | வீரசோழியம் | ... 90 |
| 5 | வார்த்தை தடுமாறும் வந்து! | ... 93 |
| 6 | திருமந்திரம் - குறிப்புரை | ... 94 |
| 7 | கரந்து நில்லாக் கள்வன் | ... 98 |
| 8 | சிவாகம ஸார ஸர்வஸ்வம் | ... 104 |
| 9 | நிலை வேறுபாடுகள் | ... 108 |
| 10 | அருணகிரியார் செய்த அலங்காரம் | ... 112 |
| 11 | “கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்” | ... 116 |
| 12 | தமிழ்நாடு தெய்விகப் பேரவைத் தலைவர் | ... 120 |
| 13 | சித்தாந்த வினாவிடை | ... 122 |
| 14 | செய்திகள் | ... 127 |
| 15 | எதிர்காலம் | ... 130 |
| 16 | Extract from the Visitor's Book | 103, 119, 121, 129 |

உ

சிவமயம்

# வாழி தைப்பெண் !

புலவர் - வேலன் ]

ஆதிரை நாளில் ஐயன்
அருந்திருக் கூத்துப் போற்றி,
'யாதினி வேண்டும்' என்றே
யாமெலாம் செம்மாப் பெய்தி
மேதினி நிலை மறந்தே
மேவியே இருக்கும் போது,
கோதிலாத் தைப்பெண் வந்து
குலவியே நடங்கொள் கின்றாள் ! 1

சிந்தையில் மகிழ்ச்சி தேங்கச்
செயலினில் ஆண்மை ஓங்க
முந்தையோர் கவிதை தம்மில்
முடுகிய ஆர்வம் பொங்க
நிந்தையில் நெறியே பேணும்
நினைப்பினில் உறுதி தங்க
வந்தனை ! தைப்பெண் ணே, நீ
வாழிய, வாழி ! என்போம் !

கரும்பொடு நெற்க திர்கள்
கவினுற விளைந்தே எங்கும்
விரும்பிய விளைவு முற்றி
விழைந்தவை விழைந்த வாறே
அரும்பிடப் பெற்றே வையம்
அளவிலா நிறைவில் ஓங்கப்
பெரும்புக ழோடு வந்தாய்,
பெண்ணே நின் சீர்மை வாழ்க ! 3

தேனுகக் குறளைத் தந்த
தேவனார் மகளாய், இன்பக்
கானகச் சிலம்பொ லித்த
கலைஞனின் மடித் தவழ்ந்தே
வானுடும் பத்தி வெள்ள
வண்புன லாடி இங்கே
ஆனுத மறும லர்ச்சி
அணைப்பிலே இன்பங் கொண்டாய்! 4

பொங்கலைப் படைத்துப் போற்றிப்
பொற்கொடி ! உன்பாற் பெற்ற
பங்கமில் வளங்க ளெல்லாம்
பாட்டினில் வடித்து நின்றே
சிங்கநேர் இளைய மாந்தர் –
சேல்விழி மாத ரோடும்
இங்கெலாம் விழாக் கொள்கின்ருர் !
எழில்மகள் ! நின்சீர் வாழி ! 5

வழுவிலாப் பத்தி வேண்டும் ;
வாய்மைநற் றூய்மை வேண்டும் ;
கெழுமிய நல்ல றத்தில்
கிளர்ந்திடும் நெஞ்சம் வேண்டும் !
தொழுகுலந் தோறும் அன்பு
துணை நிற்ப மிளிர்தல் வேண்டும் !
எழுக, நீ ! தைப் பெண்ணே ! நீ
இங்கிவை அருளு தற்கே ! 6

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 29 | சௌமிய - மார்கழி - 10 —1—70 | இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே,

—சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## பாவையும் பாவையரும்

ஓர் ஆண்டில் மழை, பனி, வெயில் என்னும் மூன்றும் ஒன்றன்பின் ஒன்றாக ஆவணிமுதல் நந்நான்கு மாதங்களில் முறையே மிகுந்து காணப்படும். அந் நந்நான்கு மாதங்களில் இவ்விரண்டு மாதங்கள் அவற்றிற்குரிய முற்கூறும், பிற்கூறு மாய் அமையும். அவற்றுள் முற்கூற்றில் முற்கூறிய மழை முதலியன வலுப்பெற்றுத் தோன்றும். ஆகையால் மார்கழி யும், தையும் முன் பனிக்காலமாதலின், இவ் இருமாதங்களில் பனி மிகுந்து காணப்படுவதாம். அவற்றுள்ளும் மார்கழியிலே மிகமிகுந்து காணப்படும். பகல் நேரமும் மிகக்குறைவு. அதனால், இம்மாதத்தில் விடியலில் எழுதல் என்பது இயலாத ஒன்றாகத் தோன்றும். ஆயினும், இயற்கையில் உள்ள இடையூற்றை எதிர்த்து வெற்றி பெறுவதே மனித ஆற்ற லுக்கு உள்ள ஒரு தனிச்சிறப்பு. அச்சிறப்பை நழுவ விடாது

போற்றுபவரே சிறப்புடைய மக்கள். 'செயற்கரிய செய்வார் பெரியர்; செயற்கரிய செய்கலாதார் சிறியர்' என்கின்ருர் திருவள்ளுவர். அம்முறையிலே இம்மாதத்தில்தான் விடியலில் எழுந்து நீராடும் மரபை நம்முன்னேர் வகுத்துள்ளனர்.

பெரியோர்க்குரிய செயற்கரிய செயல் தவச்செயல்களே. அவற்றை இயமம், நியமம் முதல் எட்டாக வகுப்பர். அவற்றுள், 'நியமம்' என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அஃது உள்ளமும், உடலும் மதத்துத்திரியாது அடங்கி நன்னெறிப்படுதற்பொருட்டுக் குளிர்ந்த நீரில் பன்முறை குளித்தல், வறுநிலத்து இருத்தல், கிடத்தல், உண்டி சுருக்கல், காய் கனி கிழங்கு சருகு முதலியவற்றையே உணவாகக் கொள்ளல் முதலாகப் பலவகைப்படும். இனி முதலிற் சொல்லிய 'இயமம்' என்பது சிறியார்க்குரிய செயல்களைச் செய்யாமை. அதுவும், வெஃகாமை, வெகுளாமை, கள்ளாமை, கள்ளுண்ணமை, புலால் உண்ணமை, கொல்லாமை, பிறன் மனையையும் பொதுமகளிரையும் விழையாமை, பொய்யாமை முதலாகப் பலவகைப்படும். இவையே நோன்பு அல்லது விரதம் எனப்படும். இவ்விரதங்கள் பெரும்பான்மையும் துறந்தார்க்கே உரியனவாயினும் இல்லறத்தாரும் இயன்ற அளவில் கடைப்பிடித்தல் இன்றியமையாததே. நோன்புகளைக் கடைப்பிடிப்பதே நோற்றல் அல்லது தவம் செய்தல் எனப்படுகின்றது. ஞானமேயன்றிச் செல்வம், நன்மக்கட் பேறு, நோயின்மை, நீடிய வாழ்நாள் முதலிய உலகப் பயன்களையும் நோன்பே தருவதாகும். இதனை, "இலர்பல ராகிய காரணம் நோற்பார் - சிலர்; பலர் நோலா தவர்" என்னும் குறளால் தெரிவிக்கின்ருர் திருவள்ளுவர். "மேலைத் – தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்" என்று ஒளவையாரும் கூறுகின்ருர்.

விடியலில் எழுந்து நீர்பலகால் மூழ்குதல் முதலிய செயற்கரிய நோன்பை நோற்றற்கு முன்பனிக் காலத்தின் முதல் திங்களாகிய மார்கழித்திங்களே மிக உரிய திங்களாக நம் முன்னேர்களால் வகுக்கப்பட்டது. இது தேவர்கட்கும் விடியற்காலமாகும். அதனல், எத்தகையோரும் இத்திங்களில் விடியலிலே விழித்தெழுவர். கோயில்களிலெல்லாம் திருப்பள்ளியெழுச்சிக் காலத்தில் திருச்சங்கம் தவருது ஒலிக்கும்; திருச்சின்னம் ஊதப்பெறும்; வாத்தியங்கள் பலவும் மழைமுழக்கென முழங்கும்; ஆடவரும், பெண்டிரும் ஆண்டவனது

அருள் நீரில் மூழ்கித் திளைப்பவர்போலத் தண்ணீரில் மூழ்கித் தண்ணருள் வேண்டி இறைவனைத் துதிப்பர்.

இத்தகையோருள் சிறப்பாகப் பங்கு கொள்வோர் கன்னிப் பெண்களாவர். இளமை மிகுதியால் இவர்கள் இப்பனிக் காலத்தில் விடியலில் எழுந்து நீராடி இறைவனை வேண்டும் செயலில் இன்பமாகவே ஈடுபடுவர். இல்லங்கள் பலவற்றிலும் உள்ள இளம் பெண்கள் பலரும் ஒருவரை ஒருவர் இன் சொல்லாலும், வன்சொல்லாலும், தகைச்சொல்லாலும், நகைச்சொல்லாலும் எழுப்பிக்கொண்டு ஒருங்குகூடிக் களிப்புடன் பொய்கையிற் சென்று, 'முகேர்' என்னும் ஒலி உண்டாகக் கையாற் குடைந்து, காதார் குழை ஆடவும், பைம்பூண் கலன் ஆடவும் சீதப் புனலிலே நன்கு ஆடுவர்; ஆடுங்காலத்துச் சிற்றம்பலத்தையும், சிவன் சிவகாம வல்லியை யும் பாடுவர். இங்ஙனம் பாடி நீராடிக் கரைஏறியபின் நன்கு உடுத்து நீற்றிலே ஆடி, முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாயும், பின்னைப் புதுமைக்கும் போர்த்தும் அப் பெற்றியனுயும் உள்ள இறைவனை உலகநலத்தின் பொருட்டு மழையைப் பொய்யாமற் பெய்விக்க வேண்டுவர். பின்பு, இவர்களுக்கு உண்மையில் வேண்டுவது, செங்கணவன் பால் திசைமுகன்பால் தேவர்கள்பால் எங்கும் இல்லாததொரு பேரின்பமே யாதலின், இவ்வுலகத்தில் [வாழுங்கால் அவ் வாழ்க்கை அதற்குத் தடையாய் அமையாதவாறு இறையன்பு மிக்க நல்ல கணவரையே அடைதல் வேண்டும் என வேண்டுவர். மகளிரது மணவாழ்க்கை முதலில் ஒருவகையில் அமைந்துவிட்டால் பின்னர் அதனை மாற்றிக்கொள்ளுதல் இயலாத ஒன்ருகையால், அதனை நல்லவகையில் பெறுதற்கு இந்நோன்புத் திங்கள், கன்னிப் பெண்களுக்குத் தனிச் சிறப்புத் திங்களாக அமைந்துள்ளது. அதனை வேண்டிய பின்னர் அப்பெண்கள் இறைவனது பெருமையைப் பலவாற்ரு னும் போற்றிப் புகழ்ந்து வீடடைவர்.

'இம்மரபு என்றும் நிலைபெற்று நன்முறையில் விளங்க வேண்டும்; இதனுல் சிவநெறி என்றும் செழித்தோங்கிச் செம்மை நலம் பயக்கும்' என்னும் திருவுளக் கருத்தினுலே மாணிக்கவாசகர். மெய்யரும்பி விதிர்விதிர்த்துக் கைகூப்பிக் கண்ணீர் ததும்பி இறைவன் ஒருவனையே பாடிப் பரவிய தமது திருவாசகத்துள் 'திருவெம்பாவை' என்னும் ஒரு பகுதியை அருளிச்செய்துள்ளார். அதனுல் அஃது இம்மார்கழித்திங் களில் எங்கும் சிறப்பாக ஓதப்பெறுகின்றது.

முற்காலத்தில் மார்கழிநீராடலைச் செய்த மகளிர் அந் நீராட்டுப் பாடலை அரசர்களைப் பற்றியும், பிற தலைவர்களைப் பற்றியும், அறவழி பற்றியும், இன்பம் பற்றியும், அவற்றிற் கிடையே கடவுளைப் பற்றியும் பாடியிருக்கக்கூடும். சங்கத் தமிழ்முறை அனைத்தையுமே திசைமாற்றி இறைவன்பாலாகு மாறு ஆக்கியருளிய வாதவூரடிகள், இம் மார்கழி நீராட்டுப் பாடலையும் அவ்வாருகும்படி அமைத்து அருளிச்செய்தார். அன்றுமுதல் இன்றுகாறும் அப்பாடல் வழி அனைவரும் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை - முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளை - பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனை - ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தனை - சிவலோகனை - தில்லைச் சிற்றம்பலவனை, அவன் துணைவியாய் அமர்ந்து பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளையைப் பாடித் தாம் ஆடுகின்ற பொங்கு மடுவையும் எங்கள் பிராட்டியும், எங்கோனுமாகக் கண்டு ஆடி மகிழ்வெய்துகின்றனர்.

விடியற்காலையில் தம் ஆயத்தாரையும், வைத்து விளை யாடும் பாவையையும், 'எம்பாவாய்' என விளித்து நீராட்டு வித்துத் தாமும் ஆடும் வகையில் பாடும் பாவையர்க்கே - கன்னிப் பெண்களுக்கே சிறப்பாக உரிய திருவெம்பாவைத் திருப்பாடலை இம் மார்கழித் திங்களில் - சிறப்பாக ஆதிரை விழாவை முன்னிட்ட நாட்களில் விடியற்காலையில் தமிழ் நாட்டில் திருக்கோயில்களிலுமட்டுமன்றி எந்த மூலைமுடுக்குக் களிலும் கேட்கலாம். இதற்குச் சிறப்புத்தரும் வகையில் இதுபொழுது தமிழ்நாடு எங்கணும் பாவை விழாக்கள் ஆங் காங்கு நடைபெறுகின்றன. தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களது திருவுளப்பாங்கின்வண்ணம் இவ்வாதீனத் திருக்கோயில்கள் பலவற்றிலும் பாவை விழாக்கள் சிறப்புற நிகழ்கின்றன. இவைகளில் மாயூரம் - வள்ளலார்கோயிலில் நிகழ்ந்த பாவை மாநாடு குறிப்பிடத்தக்கது. இதில் பாவைப் பாடற் சொற் பொழிவுகளும், மற்றும் பட்டிமன்றம் முதலியனவும் நிகழ்ந்து மக்களைச் சமயத்துறையில் ஊக்குவித்தன.

பாவைப் பாட்டின்வழியே பாவையர், தமக்கும், பிறர்க் கும் - ஏன்? நாடு முழுவதற்குமே நலம் உண்டாகச் செய்யும் இம்மரபு இன்னும் நன்கு செழித்தோங்கப் பாவை விழாவின் வழி அனைவரும் ஆண்டவனது அருளை வேண்டுவோம்.

உ

குருபாதம்

குருவருள்

# அருள்நெறியும் அறநெறியும்

## புலனடக்கம்

நன்மை தீமைகளைப் பகுத்தறியும் அறிவைப் பெற்ற மக்கள், தீமையை நீக்கி நன்மையைப் பெறுதற்குக் கண்ட வழிகள் பல. அவைகளே உலகில் 'மதங்கள்' அல்லது 'சமயங்கள்' என்னும் பெயரால் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு சமயத்திலும் உள்ள கொள்கைகள், பிற சமயத்திற்கும் ஒத்த பொதுக் கொள்கையும், பிற சமயங்கட்கு உடன்பாடில்லாத சிறப்புக் கொள்கையும் என இருவகைப்பட்டிருக்கும். அவற்றுள் 'புலனடக்கம்' என்பது, 'உலகாயதம், வாமம்' என்னும் இருமதங்கள் தவிர ஏனைய எல்லா மதங்கட்கும் ஒருபடித்தாக ஒத்த ஒரு கொள்கையாகும்.

'புலன்' என்பது 'நிலம்' அல்லது 'இடம்' என்னும் பொருளை உடையது. இதனை, 'புலம்' என்றலும் பொருந்துவதே. விளைநிலத்தை, "விளைபுலம்" என்றல் உலக வழக்கிலும் உள்ளது. "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு – ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" என்னும் குறட்பாவிலும், 'தென்புலம்' என்பது 'தெற்கில் உள்ள இடம்' என்றும், 'ஐம்புலம்' என்பது, 'ஐந்து இடம்' என்றும் பொருள் தந்து நிற்றலைக் காணலாம். 'புலம் விசாரிக்கிறார்' என்பதில் புலம் ஆகுபெயராய் இடத்தில் நிகழ் நிகழ்ச்சியைக் குறிக்கும். எனவே, 'புலன்' அல்லது 'புலம்' என்பதற்கு 'இடம்' என்பதே பொருளாதல் தெளிவு. தத்துவக் கொள்கையில் 'புலன்' என்பது, அறிவு செல்லுதற்குரிய இடத்தைக் குறிக்கும் குறியீடாகும். வடமொழியில் இது, 'விடயம்' (விஷயம்) எனப்படுகின்றது. இதைத் தமிழில் மொழிபெயர்த்தால், 'பொருள்' என்று மொழிபெயர்க்கலாம்.

உயிர்களின் அறிவு புறத்தே செல்லுதற்கு இடமாக உள்ளவை ஐந்து. அவை, 'ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்' என்பன. இவை வடமொழியில் முறையே, 'சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்' எனப்படும். "சுவையொளி ஊறோசை" என்னும் குறளில் திருவள்ளுவர் இவற்றைச் செய்யுளுக்கேற்ப மாற்றிக் கூறினர்.

உயிர் எந்த ஒன்றையும் தானே அறியமாட்டாது; வேறொரு பொருளைத் துணைக்கொண்டுதான் அறியும். அத் தகைய துணையும் ஒன்றிற்கு ஆவது மற்றொன்றிற்கு ஆகாது. அதனால், ஐந்து புலங்களை அறிவதற்கு ஐந்து துணை வேண் டப்படுகிறது. அவையே, 'செவி, தோல், கண், நாக்கு, மூக்கு' எனப்படுவன. இவை முறையே மேற்சொல்லிய ஓசை முதலியவற்றை அறியும் கருவிகள் என்பது வெளிப் படை. இவை தாமே இயங்குவனபோல எளிதில் விரைவாகச் செயற்படுதலின், 'பொறிகள்' எனப்படுகின்றன. பொறிகளை வடமொழியாளர், 'இந்திரியம்' என்பர். எனவே, செவி முதலிய பொறிகள் ஐந்தும் வடமொழியில் 'பஞ்சேந்திரியங் கள்' எனப்படுகின்றன. பொறிகள் அறிவனவும், புலன்கள் அறியப்படுவனவுமாகலின், அடக்கப்படவேண்டியவை பொறி களேயன்றிப் புலன்கள் அல்ல. ஆகவே, 'புலனடக்கம்' என்பதில் 'புலன்' என்பது ஆகுபெயராய்ப், பொறிகளையே குறித்துநிற்கும். "ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந் தென" என்ற சிவஞானபோதத்தின் உரையைக்காண்க. வட மொழியில் புலனடக்கம் ஆகுபெயரின்றி, 'இந்திரிய ஜயம்' என்று நேரே கூறப்படுகின்றது. இவ்வாற்றால், 'புலனடக்கம்' என்பது, ஐம்பொறிகளை அடக்குதல் என்றே பொருள்படும் என்பது பெறப்பட்டது. இனி, ஐம்பொறிகளை அடக்குதல் என்பது யாது என்று நோக்குதல் வேண்டும்.

'செவி, தோல், கண், நாக்கு, மூக்கு' என்னும் ஐம்பொறி களும் பயன்தரும் கருவியாகத்தானே உள்ளன? அவைகளை ஏன் அடக்குதல் வேண்டும்? என்ற ஐயம் அறிவுடையோர்க்கு இயல்பாக எழவே செய்யும். அதற்குத் தக்க விடை காணுதல் இன்றியமையாதது.

பொறிகள் இல்லையேல், உயிர் புலன்களை உணர வழி இல்லை. புலன்களுள் ஒன்றையும் உணராவிடின், உயிர்

சடமேயாய்விடும். ஆகவே, 'புலன் அடக்கம்' என்றால், ஐம்பொறிகளை அழித்துவிடுவது என்பது பொருளன்று; மற்றுப் பொறிகளின் வழியாக நுகரப்படும் புலன்களின்மேல் உள்ள அவாவை - ஆசையை அடக்கவேண்டும் என்பதே பொருள். அஃதாவது, பொறிகளால் ஓசை முதலிய புலன்களை அறியக்கூடாது என்பதில்லை. அறியுங்காலத்து அப்புலன்களில் அழுந்தித் தன்னை மறந்து அவற்றின் வசமாகிவிடுதலும், அப்புலன்கள் கிடைக்காத பொழுது அவற்றைப் பெறுதற்கு ஏக்கற்று அல்லற் படுதலும் கூடா என்பதே பொருள். 'புலன்களை அறிதலில் தவறில்லை; அவற்றில் அழுந்துதலும், அழுந்த விரும்புதலுமே தவறு' என்பது ஏன் எனின், புலன்களை அறிவதால் உயிரினது அறிவு முதிர்ச்சியுற்று நலந் தீங்குகளை அறிய வல்லதாகின்றது. அவற்றில் அழுந்துதலாலும், அவற்றை அடைய அவாவுதலாலும் உயிரினது அறிவு திரிந்து அறியாமையுட் படுகின்றது. அதனாற்றான் புலன்களை அறிதல் தவறன்று எனவும், அவற்றுள் அழுந்துதலும், அழுந்த அவாவுதலுமே தவறு எனவும் கூறப்படுகின்றன. "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்ற குறளில், "ஐந்து" என்றதற்குப் பரிமேலழகர், 'ஐந்து அவா' என்றே பொருளுரைத்தலும் இங்கு அறியத்தக்கது.

இன்னும், புலன்களில் நல்லனவும் உள; தீயனவும் உள. நல்லன, உயிரறிவில் உள்ள மாசினைப் போக்கித் தெளிவைத் தருவன. தீயன, அறிவை மாசுபடுத்தி மயக்குவன. அவற்றுள் தீய புலன்களை அவாவுதலே குற்றம்; நல்ல புலன்களை அவாவுதல் குற்றமன்றாதலோடு, அவற்றை அவாவுதல் இன்றியமையாததுமாகின்றது. பொறிகள், நல்லன தீயன என்னும் இருவகைப் புலன்களையுமே அறிவதற்குக் கருவியாய் அமைந்துள்ளன. அதனால், அவற்றை அடியோடு கெடுத்துவிட்டால், நல்லனவற்றையும் அறிய வழியில்லாமற் போகும். ஆகவே, 'புலனடக்கம்' என்பது, தீய புலன்களின்மேல் எழும் அவாவை அடக்குதல் என்பதேயன்றிப் பொறிகளை அடியோடு அழித்துவிடுவதென்பதன்று என்பது தெளிவாகும். இக்கருத்தைத் திருமூல நாயனர் தமது திருமந்திரத்துள் அழகுபடப் பற்பல வகையாக அருளிச்செய்யும் முறை ஆழ்ந்துணரற்பாலது.

" அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்;
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை;
அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே.

இத்திருமந்திரத்துள், 'ஐம்பொறிகளை அடக்குக' என்பாரைத் திருமூலர், 'அறிவிலார்' என்று இகழ்ந்து, 'ஐம்பொறிகளை அடக்குதல் நடவாத ஒன்று என்றும், 'நடவாத அதனை நடத்திக்காட்டும் முறையில் அவற்றை அடக்கிவிட்டால், உயிர் அசேதனம் - அறிவில்லாத சடமாவதைத்தான் பயனாகப் பெறமுடியுமேயன்றிப் பிறிதொரு பயனும் பெறப்படாது' என்றும், 'அதனால், நான் ஐம்பொறிகளை அடக்காமலே மெய்யறிவைப் பெறும்வழியைக் கண்டுள்ளேன்' என்றும் கூறுதலைப் பார்க்கின்றோம். இவற்றுள் அஞ்சும் அடக்கா அறிவு - அஃதாவது ஐம்பொறிகளை அடக்காமலே மெய்யறிவு பெறுவது எவ்வாறு என்பதைப் பின்வரும் வரும் திருமந்திரத்தால் அவர் அறிவிக்கின்றார்.

போற்றிசைத் துப்புனி தன்திரு மேனியைப்
போற்றிசெய் மீட்டே புலனைந்தும் புத்தியால்;
நாற்றிசைக் கும்பின்னை யாருக்கும் நாதனை
ஊற்றுகை உள்ளத் தொருங்கலு மாமே,

இதனுள், 'இறைவனது திருவுருவை விரும்பி, பிறவிடத்துச் செல்லும் ஐம்பொறிகளை மீட்டு அத் திருமேனியிடத்தே நல்லறிவால் நிறுத்தினால், எல்லா உயிர்க்கும் முதல்வனாகிய அவனோடு ஒன்றுபட்டு, அவனது இன்ப ஊற்றில் திளைத்தல் கூடும்' என்கின்றார். எனவே, பொறிகளை ஏனைய புலன்களில் செல்லாது தடுத்து இறைவனது திருமேனியின்பாற் செல்லவிடுதலே புலனடக்கம் அல்லது பொறியடக்கம் என்று அவர் கூறுகின்றார் என்பது தெளிவாகின்றது. நாவுக்கரசரும் இவ்வாறுதான் அருளிச் செய்கின்றார்.

கண்களை, 'காணவேண்டா' என்று அவர்சொல்லவில்லை; " காண்மின்கள்; ஆனால், கடல்நஞ்சுண்ட கண்டன்றன்னைக் காண்மின்கள்; பிறிதொன்றைக் காணவேண்டா" என்கின்றார். இக்காட்சியையே, கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண்டார்தல்" என்று சேக்கிழாரும், " இத்தகைய பொலிவினைக்

கணேதே போதியோ பூம்பாவாய்" என்று ஞானசம்பந்தரும் அருளிச்செய்கின்றார்கள். இவ்வாறே செவிகளையும், 'கேட்க வேண்டா' என்னாது, "கேண்மின்கள்; எரிபோல் மேனிப் பிரான் திறம் கேண்மின்கள்" என்கிறார் நாவரசர். எனவே, 'ஏனைய பொருள்களைக் கண்டு அவற்றின் அழகில் ஈடுபடு கின்ற கண்களை அவ்வாறு செய்யாதபடி மீட்டு, இறைவரது திருமேனியில், பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு தேவர்களை அமரராய் வாழச் செய்த அளவற்ற கருணையைப் புலப்படுத்தும் நீலமணிபோலும் கண்டத்தின் அழகு முதலிய வற்றைக் கண்டு களிக்கச்செய்தலும், வெறுங் குழலிசை, யாழிசை, மிடற்றுப்பாடல் முதலியவைகளைக்கேட்டு அவ்விசை இன்பத்தில் ஈடுபடும் செவிகளை அவ்வாறு செய்யாதபடி மீட்டு இறைவனது பொருள்சேர் புகழொடு கூடிய உரையும் பாட்டும் ஆகியவற்றைக் கேட்டு இன்புறச் செய்தலும் போல்வனவே பொறிகளை அடக்கும் முறை என்பது நன்குபெறப்படுகின்றது.

" ஆமாத்தூரரனே என்றழைத்தலும் - தேமாத் தீங்கனி போலத்தித் திக்குமே" எனவும் "விலையிலி சாந்தம் என்று வெறிநீறு பூசி விளையாடும் வேட விகிர்தர்" எனவும் அருளிய வாற்றால், இறைவனை வாழ்த்தலும், அவனது திருநீற்றைப் பூசுதலும் உள்ளத்திற்கு மட்டுமன்றி நாவிற்கும், உடற்கும் இன்பம் பயப்பனவாதல் அறியப்படும். இறைவனது திருமேனி யில் இயற்கையாகவும், அமரரும் அடியவரும் சூட்டும் மலர் முதலியவற்றால் செயற்கையாகவும் எழும் மணங்கள் மூக்கிற்கு இன்பந் தருவனவாக உள்ளனவாம். இவ்வைம்புல இன்பங் கள் ஆன்ம அறிவின் மலத்தை அகற்றி அருள்தெளிவை உண்டாக்குவன ஆதல் அறிந்து கொள்க.

உலகப் பொருள்களில் செல்லும் ஐம்பொறிகளை அவ்வாறு செல்ல ஒட்டாது தடுத்து இவ்வாறு இறைவழிபாட்டிற் செலுத் துதல் எளிதான செயலன்று. மதங்கொண்ட யானையை - ஓர் யானையையல்ல; ஐந்து யானைகளை ஒருபாகன் அடக்கிச் செம்மை யான வழியில் செலுத்துதல்போலும் மிக அரிய செயல் என்பதையும் திருமூலர்,

" ஆக மதத்தன ஐந்து களிறுள;
ஆக மதத்தறி யோடணை கின்றில;
பாகனும் எய்த்தவை தாமும் இளைத்தபின்
யோகு திருந்துதல் ஒன்றறி யோமே."

எனக் குறிக்கின்றார். ஐம்பொறிகளும் ஆக மதத்தன - மிக மதம்கொண்ட ஆண்யானைகள். அவை அம்மிக்க மதத்தால் தறியருகில்-இறைவன்பால் செல்ல மறுக்கின்றன. அவைகளை அடக்கி அத்தறியில் கட்டமாட்டாமல் பாகன் — உயிர்க் கிழவன் இணைத்து விடுவானானால், பின்பு அவைகளும் இளைத்து - இறப்பு வந்து இணங்கித் தொழில்புரியும் பயன் - சிவபோகம் இல்லாமலேயே போய்விடும் என்பதாம். ஞானசம் பந்தரும் திருக்கேதாரத் தலத்தை, "தொண்டர் அஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார் மலர் - இண்டைகட்டி வழிபாடு செய்யும் இடம்" என்று வியந்தருளிச் செய்கின்றார்.

ஐம்பொறிகளையும் அடக்கும் முறை அருள்நெறியில் இவ்வாறு விளக்கமாகச் சொல்லப்படுவதுதான் அறநெறியில்,

"உரன் என்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து"

எனவும்,

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

எனவும் குறிப்பாகச் சொல்லப்படுகின்றது. இக் குறட்பாக் களில் "உரன்" என்றது அருளாசிரியர் அருள்மொழிவழி நிற்கும் அறிவையும், "ஆமைபோல்" என்ற உவமையால் பெறுவிக்கப்பட்ட அதன் ஓடு, மேல் திருமூலர், "தறி" எனக் குறித்த இறைவன் திருவருளையும் குறிப்பனவாம்.

ஐம்பொறிகளைத் திருமூலர் மற்றொரு திருமந்திரத்தில் 'சிங்கம்' எனக்கூறி, அவைகளைக் கொன்றுவிடுதல் கூடாது; அவற்றின் நகங்களை அறுத்துப் பற்களைப் பிடுங்கிவிட வேண்டும்; அவ்வாறு செய்தால், அவற்றையே ஊர்திகளாகக் கொண்டு இறைவனிடம் செல்லலாம்' என்றார்.

"அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன;
அஞ்சும்போய் மேய்ந்துதம் அஞ்சக மேபுகும்;
அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்,
எஞ்சா திறைவனை எய்தலு மாமே"

மற்றோரிடத்தில் ஐம்பொறிகளைப் பாற்பசுக்களாகக் கூறும் முறையும் கண்டு மகிழத் தக்கது.

"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு;
மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன;
மேய்ப்பாரும் உண்டாய், வெறியும் அடங்கினல்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே.

இங்ஙனம் பாலாச் சொரிவதைத்தான் திருவள்ளுவர் எழுமைக்கும் உள்ள ஏமாப்பாகக் கூறினர். எனவே, இத் துணைப் பயனுடைய ஐம்பொறிகளை மிகவும் கொடியன என்று அழிக்கக் கருதுபவர்களைத்தான் திருமூலர், மேல் "அறிவிலார்" என்று குறித்தார். எனவே, ஐம்பொறிகளை அழிக்கக் கருதாது அவற்றின்வழி எழும் ஆசையை அடக்கி இறைவனிடத்தில் அன்பு செலுத்துதலே தக்கதாம். எங்கள் ஆதிபரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தரும் இந்த ஐம்புல ஆசையை அறுக்க வேண்டும் என்றே அருளிச் செய்கின்ருர். ஐம்புல ஆசை அற்ருல்தான் உலகப்பற்று விடும். இவ்விரண்டிற்கும் வழி, ஆன சிவ பூசைசெய்தல். அஃதாவது கண், காது, அனைத்துக் கருவிகளையும் இறைவன் பணியிற் செலுத்துதல். அஞ் செழுத்தை அன்புடன் நெஞ்சில் நினைத்தலும், நாவால் சொல்லுதலும் இறைவன்பால் அன்பைப் பெருக்குவனவாம். ஐம்புல ஆசை இருப்பின் அவை கிடைக்காதபொழுது சினம் மிகும். ஆகவே, ஆசையையறுத்துப் பாசத்தையும் விட்டால் சினம் என்பதே இல்லாது சாந்தமே வடிவாகலாம். இவ் வனைத்துப் பயன்களையும் எளிதில் தருவது திருமுறைப் பாரா யணம். இவைகளைச் செய்யாமலே சிலர் பெரியகாரியம் செய்து விட்டவர்கள் போலப் பெருமை பேசிக்கொள்வார்க ளானல், அவருக்கு நாம் என்ன சொல்ல முடியும்? மக்களை நோக்கி இவ்வாறு தாம் கூற நினைத்ததைத் தம்மனத்தை நோக்கிக் கூறுகின்ருர் எங்கள் குருமுதல்வர்.

ஆசையருய்; பாசம்விடாய்; ஆனசிவ பூசைபண்ணுய்;
நேசமுடன் அஞ்செழுத்தை நீநினையாய்—சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

இத்தகைய அருள்நெறி முறையே அறநெறியிலே அமைந்திருத்தலை அறிந்து, ஐம்புல ஆசையை அடக்கி அனைத்துக் கரணங்களாலும் ஆண்டவனை வழிபட்டு, அவன் பால் அன்பைப் பெருக்கி, அனைத்து நலனையும் மக்கள் அடைவார்களாக.

# வீரசோழியம்

டாக்டர் செ. வை. சண்முகம் M. A., M. Litt, Phd.

## 1. இலக்கண ஆராய்ச்சி :

இலக்கணம் ஒரு மொழியின் அமைப்பை விளக்குவது. மொழியின் அமைப்பை விளக்கும் முறையில் இலக்கண ஆசிரியனின் கொள்கையும் இலைமறை காய்மறையாக அது வெளிப்படுத்தும். எனவே இலக்கணத்தை ஆராயும்போது இலக்கணத்திலிருந்து இலக்கண ஆசிரியனின் மொழிபற்றிய கொள்கை (Linguistic theories) யும் தனித்தனியே அறிந்துகொள்ள வேண்டும். முன்னது மொழியியல் வளர்ச்சியும் பின்னது மொழி வரலாறு போன்ற பிறவற்றையும் காட்டும். மேலும் இலக்கணம்தான் எழுதப்பட்ட கால அல்லது எடுத்துக்கொண்ட கால மொழி நிலையை எவ்வாறு காட்டுகிறது என்பதையும் ஆராயவேண்டும்.

ஆராய எடுத்துக்கொண்ட இலக்கணம் அம்மொழிக்கு அமைந்த முதல் இலக்கணமாக இல்லாமல் பின்னர் எழுதப்பட்டதாக இருக்குமானல் வேறு சில நிலைகளிலும் அவ்விலக்கணத்தை ஆராய்தலும் அவசியமே. பின்னர் எழுதப்பெற்ற இலக்கணத்தால் அம்மொழியின் இலக்கணத்தில் அதாவது மொழி அமைப்பை விளக்குவதில் ஏற்பட்ட திருத்தங்கள் பற்றியும் முதல் இலக்கணம் எழுதப்பட்ட காலத்திற்குப் பிறகு மொழியில் ஏற்பட்ட மாற்றங்களை எவ்வாறு காட்டுகிறது என்பது பற்றியும் ஆராய்ந்து அறிதல்வேண்டும்.

தமிழில் தொல்காப்பியத்திற்குப் பிறகு இடைக்காலத்தில் மூன்று இலக்கணங்கள் தோன்றியுள்ளன. அவையாவன வீரசோழியம், நேமிநாதம், நன்னூல். இவற்றுள் வீரசோழியமே முந்தியது.

வீரசோழியம் இடைக்காலத்தில் எழுதப்பெற்ற முதல் நூலாகும். அது 11 ஆம் நூற்றுண்டில் புத்தமித்தரனர் என்பவரால் எழுதப்பெற்றது. இதற்குப் பெருந்தேவனர் என்பவரால் எழுதப்பெற்ற உரையும் கிடைக்கின்றது. அவரும்

புத்திரமித்திரனார்க்கு மிக அண்மைக் காலத்திலேயே வாழ்ந்திருக்கவேண்டும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்,

## 2. பெருந்தேவனாரின் மொழியியற் கொள்கை :

### 2, 1. எழுத்ததிகாரம் :

எழுத்ததிகாரத்தில் சந்திப்படலம் என்று ஒரே படலம் மட்டும் உள்ளது. அதில் எழுத்துக்களின் எண்ணிக்கை வகை, பிறப்பு, அளவு, முதனிலை, இறுதிநிலை, புணர்ச்சி ஆகிய 28 நூற்பாக்களால் கூறப்பட்டுள்ளன. இப்படலத்தில் எழுத்திலக்கணமும் கூறப்படுகின்றதாயினும் மிகுதியாகக் கூறப்படுவது சந்தி இலக்கணமாதலின் சந்திப் படலம் எனப்பெயர் பெற்றது எனப் பதிப்பாசிரியர் திரு. கா, ர. கோவிந்தராச முதலியார் விளக்கம் கொடுத்துள்ளார். அவ்வாறே 8 நூற்பாக்களும் புணர்ச்சியிலக்கணமும் பேசுவது அக்கருத்தை வலியுறுத் து

மொழியியல் ஆராய்ச்சியில் இன்று புதிதாக ஒரு கருத்து நிலவுகிறது அக்கருத்துப்படி சொற்களின் உறுப்புக்களாக எழுத்துக்கள் வருகின்றனவே தவிர எழுத்துக்குத் தனியே வேறு ஒரு பயன் இல்லையாதலால் சொற்களில் (Morpheme) எழுத்துக்களின் (phoneme) தன்மை (Morphophoneme) ஆராய வேண்டுமே தவிர தனியே எழுத்திலக்கணம் (Phonology) ஆராயவேண்டுவதில்லை ஆனால், இத்தகைய கருத்தைப் பெருந்தேவனார் கொண்டிருந்தார் என்று திட்டவட்டமாகக் கூற முடியாது. ஆயினும் அந்தக் கருத்தைப் படிக்கும்போது அம் முறையில் விளக்கம் காண மனம் தூண்டுகிறது

எழுத்ததிகாரம் மிகச் சுருங்கிய அளவில் கூறப்பட்டுள்ளது. மெய் மயக்கங்கள் எவையெவை என்று குறிப்பிடப்படவில்லை. எழுத்துக்களின் பொதுப் பிறப்பு அதாவது பேச்சொலி (Speech Sound) தோன்றும் முறை விளக்கப்பட்டுள்ளதே தவிர தமிழ் ஒலிகள் உச்சரிக்கும் முறை விளக்கப்படவில்லை.

### 2. 2. சொல்லதிகாரம் :

சொல் ஆறு படலங்களாக விளக்கப்பட்டுள்ளது. அவை வேற்றுமைப்படலம், உபகாரப் படலம், தொகைப்படலம், தாதுப் படலம், கிரியா பதப் படலம் என்பன.

வேற்றுமைப் படலத்தின் வேற்றுமையின் எண்ணிக்கை, வேற்றுமை உருபுகள், மூவிடப் பெயர்கள் அடங்கியுள்ளன. உபகாரப்படலம் ஒவ்வொரு வேற்றுமைக்குரிய பொருள் பற்றியும், தொகைப்படலம், தொகைகளின் வகைப்பற்றியும், தத்திதப்படலம் பெயர்ச்சொல்லுக்குரிய விகுதி, வடமொழியாக்கம் (வடசொற்கள் தமிழில் வந்து வழங்கும் முறை) பற்றியும், தாதுப்படலம் அடிச்சொல் (roat) பற்றியும் (அதுவும் வினையடிச் சொல் மட்டுமே பற்றியும்) கிரியாபதப் படலம் வினை விகுதி பற்றியும் பேச்சுவழக்கு பற்றியும் பேசுகின்றன.

பொதுவாக, தமிழ்மொழியின் சொல்லமைப்பு (Grammatical Structure) காட்டுவதாக சொல்லதிகாரம் அமையவில்லை என்று கூறிவிடலாம். ஏனெனில் தமிழ்ச் சொற்களின் பாகுபாடு பற்றியும் அவற்றின் இலக்கணம் பற்றியும் குறிப்பிடாமல் சில இலக்கணக் கூறுகளை மட்டுமே பேசுகிறது இந்நூல் இதனால் டாக்டர் சுப்பிரமணிய சாஸ்திரியார் வீரசோழியம் தமிழ் ஆராயும் முறையைத் திரிபுபடுத்தி விட்டதாகக் கூறியது மிகவும் பொருத்தமானதே.* இதன்மூலம் பெருந்தேவனாரின் மற்றொரு கருத்தும் புலப்படுகின்றது.

அவர் பாயிரத்துள் கூறியபடி 'வடநூல் மரபும்' தமிழில் புகுத்தியுள்ளது படலத்தின் தலைப்புக்களாலும் அறியமுடிகிறது மேலும் வடமொழிக்கே உரிய இலக்கணத்தையும் குறிப்பிட்டுள்ளார். எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் உள்ள 85 நூற்பாக்களில் 11 நூற்பாக்கள் வடமொழிக்கேயுரிய இலக்கணத்தைக் கூறுகின்றன. அத்துடன் பல வடமொழி கலைச்சொற்கள் ஆங்காங்கே கையாளப்பட்டுள்ளன. சான்றாக மிடறு என்பதைக் கண்டம்$ என்றும் பெயர் என்பதை நாமம் என்றும் (14) தோன்றல், ஆகமம் என்றும் (13) வழங்கியுள்ளதைக் குறிப்பிடலாம்.' எழுத்துக்களின் வரிசை எண்ணல் அதாவது இகரம் நான்காம் உயிர் என்றும் (15) ஙகரம் ஆறும் மெய் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதும் வடமொழி பின்பற்றியேயாகும்.

( தொடரும் )

---

* Viracoliyam has distorted the perspective through which the linguistic phenomena of the Tamil language should be analysed and evaluated 'History of Grammatical theories in Tamil' Page 5.

$ சிலம்பு (7-32-7) மணிமேகலை (18-83) ஆகிய இரு இலக்கியங்களிலும் இச்சொல் பயின்று வந்துள்ளது அறியத்தக்கது.

# வார்த்தை தடுமாறும் வந்து!

## தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

முற்று இளவயதில் மூண்டதொரு காதலினல்
நற்றவத்தோய் நின்னிடத்து நாம்சேர்ந்தோம் – அற்றைநாள்
எம்மையும் ஓர்பொருள் ஆக்கி எடுத்தாண்டாய்க்
கிம்மையில் யாம்செய்வ தெவன் ?

சுப்ர மணியச் சுடர்மா மணி ; குருவாய்
அப்பரமம் காட்டி அருளுமணி ; – இப்பிறவி
யாம்கொண்ட போதே இறைவன் அளித்தமணி ;
ஆம், தருமை யார்ந்தமணி யே !

நின்றும் கிடந்தும் நினைந்தழுதும் நின்தொழும்பை
என்று பெறுவதென ஏங்கியக்கால் – நன்றுவினை
தீர்த்தெம்மை யாண்ட திறம்கருதின் நெஞ்சுருகி
வார்த்தை தடுமாறும் வந்து.

அருள்மாசி லாமணியின் அன்பின் வயமாய்ப்
பொருள்மாசி லாமற் பொழிந்த – குருபரர்போல்
மும்மணிக் கோவை முழங்குகிலோம் ! ஏற்றிடுக,
எம்மனமே அக்கோவை யென்று !

# திருமந்திரம் - குறிப்புரை

திருக்குறள்வேள்,

**திரு. ஜி. வரதராசப் பிள்ளை B. A.,**

17 காயம் இரண்டுங் கலந்து கொதிக்கினு
மாயம் கத்தூரி யதுமிகும் அவ்வழி
தேசங் கலந்தொரு தேவனென் றெண்ணினும்
ஈசன் உறவுக் கெதிரில்லை தானே.

குறிப்புரை :- காயம் இரண்டு – சூக்கும தேகம், தூல தேகம். கத்தூரி - கானம், ஸ்பந்தம் (அசைவு, Vibration). சூக்கும தேகமும் தூல தேகமும் கலந்திருந்தாலும் ஸ்பந்தமாகிய இனிய உணர்வு சூக்கும தேகத்தில்தான் மிகுந்து தோன்றும் என்க. தேசு - ஒளி. உறவு - தொடர்பு. எதிர் இல்லை - நிகர் இல்லை.

ஒளியுடையோம் என்று எண்ணினும் ஈசனது ஒளிக்கு நம் ஒளி நிகர் ஆகாது என்பதாம். 17

18 அதிபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவம் நோக்கி
அதுபதி யாதரித் தாக்கம தாக்கின்
இதுபதி கொள்ளென்ற எம்பெரு மானே.

குறிப்புரை :- அதிபதி செய்து - வடதிசைக்குத் தலைவனைச் செய்து. அளகை வேந்தன் - குபேரன். (சந்திரன்). அதுபதி ஆதரித்து - வடதிசையைப் போற்றி. ஆக்கமது ஆக்கின் - சேமிப்பைப் பெருக்கின். சேமிப்பாவது, உயிரின் சக்தியாம். இது பதி கொள் - வடதிசையாகிய ஒளி மண்டலமே சிறந்த இடம் கொள்வாயாக.

விந்து ஜெயத்தைச் செய்தவர் ஒளி மண்டலத்தைப் பெறுவர் என்பதாம். 18

19 இதுபதி ஏலங் கமழ்பொழில் ஏழும்
முதுபதி செய்தவன் மூதறி வாளன்
விதுபதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி
அதுபதி யாக அமருகின் றானே.

குறிப்புரை :- ஏலம் – வாசனை. ஏழு - ஏழு ஆதாரங்கள். முதுபதி - சுடுகாடு. விதுபதி செய்தவன் – சந்திரகலையை யோக நெறியில் பதியச் செய்தவன். அது பதியாக - அந்நெறியில் நிற்போரை இடமாகக் கொண்டு.

மூதறிவாளனாகிய சிவன் மெய்த்தவத்தில் நிற்போரிடம் விளங்குவான் என்பதாம். 19

20 முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறநெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசர் உருவங்
கடிமலர்க் குன்ற மலையது தானே.

குறிப்புரை :- முடிவு - இறப்பு. முன்னே - தலைநாளில். இடியும் முழக்கமும் – ஒளியும் (விந்துவும்). ஓசையும் (நாதமும்). அடிகளது அறநெறி விந்து நாதம் என்க. மலை - சிரம்.

ஈசன் உறையும் இடம் சிரம் என்பதாம். 20

21 வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தளங்
கோனைப் புகழுமின் கூடலு மாமே.

குறிப்புரை :- கொண்டல் மால் - மேகம் போன்ற கரிய திருமால். கானக் களிறு - காட்டு யானை, ஆணவம்.

ஆணவமாகிய யானையை அழிக்கும் கோனைப் புகழுமின் என்பதாம். 21

22 மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன்
நினைத்த தறிவ னென்னில் நினைக்கிலர்
எனக்கிறை அன்பிலன் என்பர் இறைவன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே.

குறிப்புரை :- மாயநன்றுடன் - நல்ல மாயாமயப் பிரபஞ்ச முடையவன். பிழைக்க நின்றார் - உய்ய நின்றார். பேணி நின்றான் - விருப்பம் கொண்டிருக்கின்றனன்.

உய்திபெற வேண்டும் என்று எண்ணுபவரை விரும்பி ஏற்றுக்கொள்வான் இறைவன் என்பதாம். 22

23 வல்லவன் வன்னிக் கிறையிடை வாரண
நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை
இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே.

குறிப்புரை :- வன்னிக்கு இறை - அக்கினிதேவன். வாரண இடை - கடல் நடுவே.

உடம்புள் கடற் பிரதேசமான மணிபூரகத்தில் மூலக்கனலாகிய ஜாடராக்கினியை நிற்பித்துச் சமன் செய்து நீதியருளுகின்றான் என்பதாம். 23

24 போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்னடி
தேற்றுமின் என்றுஞ் சிவனடிக் கேசெல்வ
மாற்றிய தென்று மயலுற்ற சிந்தையை
மாற்றிநின் றார்வழி மன்னிநின் றானே.

குறிப்புரை :- தேற்றுமின் - தெளிமின். மாற்றியது - உரியது. மயல் - மயக்கம்.

எல்லாம் சிவனது உடைமையே என எண்ணுவார் மனத்தில் நிலைபெற்றுள்ளான் சிவன் என்பதாம். 24

25 பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே.

குறிப்புரை :- பிஞ்ஞகன் - யாவற்றையும் ஒடுக்குபவன். துறப்பிலி - நீக்கமின்றி இருப்பவன். மறப்பிலி - மறக்காதவன். மாயா விருத்தம் - மாயையைக் கெடுத்தல்.

பேரருளாளனைத் தொழுதால் கேவல சகலத்தைச் செய்யும் மாயை நீங்கும் என்பதாம். 25

26 தொடர்ந்துநின் றானைத் தொழுமின் தொழுதால்
படர்ந்துநின் றான்பரி பாரக முற்றுங்
கடந்துநின் றான்கம லம்மலர் மேலே
உடந்திருந் தானடிப் புண்ணிய மாமே.

குறிப்புரை :- பரிபாரகம் - விசாலமான உலகம். கமலம் மலர் - சகஸ்ரதளம். உடந்திருத்தல் - உடனாய் இருத்தல்.

தொடர்ந்து நின்றானாகிய சிவனைத் தொழுதால் புண்ணியம் உண்டாம் என்பதாம். 26

27 சந்தி எனத்தக்க தாமரை வாண்முகத்
தந்தமில் ஈசன் அருள்நமக் கேயென்று
நந்தியை நாளும் வணங்கப் படும்அவர்
புந்தியி னுள்ளே புகுந்துநின் றானே.

குறிப்புரை :- சந்தி எனத் தக்க தாமரை - சுவாதிட்டானச் சக்கரம். (சேர்க்கையை விரும்பும் இடம்). வாள் முகம் - ஒளி பொருந்திய முகம்.

சுவாதிட்டானச் சக்கரத்தில் உள்ளவனை வணங்குவாரது புத்தியுள் விளங்குவான் என்பதாம். 27

28 இணங்கிநின் றானெங்கு மாகிநின் றானும்
பிணங்கிநின் றான்பின்முன் னாகிநின் றானும்
உணங்கிநின் றானம ராபதி நாதன்
வணங்கிநின் றார்க்கே வழித்துணை யாமே.

குறிப்புரை :- எங்கும் - எல்லா இடத்தும். பின்முன் - எல்லாக் காலத்தும். பிணங்கி - மாறுபட்டு. உணங்கி - செயலற்று. அமராபதி நாதன் - சிவன். 28

29 காணநில் லாயடி யேற்குற வாருளர்
நாணநில் லேன்உன்னை நான்தழு விக்கொளக்
கோணநில் லாத குணத்தடி யார்மனத்
தாணிய னாகி அமர்ந்துநின் றானே.

குறிப்புரை :- நாணுதல் - கூசுதல். உன்னுடைய உடைமையாதலின் தழுவிக் கொள்ளக் கூச்சம் இல்லை என்க. கோணநில்லாத - கோணாத. ஆணியன் – அச்சாணிபோன்று தாங்குபவன். 29

30 வானின் றழைக்கும் மழைபோல் இறைவனுந்
தானின் றழைக்குங்கொல் என்று தயங்குவார்
ஆனின் றழைக்கு மதுபோல்என் நந்தியை
நானின் றழைப்பது ஞானங் கருதியே.

குறிப்புரை :- வான்நின்று அழைக்கும் - வானத்திலிருந்து ஒலிக்கும். ஆன் - ஆன் கன்று.

உலகர் வேண்டாது தானே பெய்யும் மழை போலாது. வேண்டுவார்க்கே ஞானத்தை அருளுவான் என்பதாம். 30

( தொடரும் )

# கரந்து நில்லாக் கள்வன்

திரு. T. N. அருணாசலம் B. A., B. L.,

( மலர் 28, இதழ் 12, பக்கம் 680 இன் தொடர்ச்சி )

7. இப்பாடலில் அச்சுப் பிழையாக இருக்கலாமோ எனக் கருதக் கூடிய ஒரு சொல் இவ்வுரை மயக்கத்திற்கு இடம் தந்திருக்குமோ என ஐயப்பட இடமுண்டு. போப் அவர்கள் பதிப்பில், பாடலின் மூன்றாவது அடியில் உள்ள 'எனக்கு' என்ற சொல் 'எனக்கும்' என்று அச்சிடப்பட்டுள்ளது நம் உரையாசிரியர்களது ஒரு சில பதிப்புக்களிலேயும் இச்சொல் 'எனக்கும்' என்றே அச்சிடப்பட்டு, இம்மாற்றத்திற்கு இணங்கவே பொருளும் சொல்லப்பட்டிருக்கின்றது இந்த 'ம்' கூடியது அச்சுப் பிழையாக நேர்ந்த தொன்று. அல்லது 'எனக்கும்' என்பதுதான் திருத்தமான பாடமா என்பது நம் சிந்தனைக்குரியது. பல பதிப்புக்களில் 'எனக்கு' என்றே பாடம் இருப்பதும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டிய தொன்றும். அண்மையில் வெளியிடப்பட்ட ஒரு உரை 'எனக்கும்' என்ற சொல்லைச் சரியான பாடமாகக் கொள்வதே போன்று, பாடலின் பிற்பகுதிக்கு 'இடையீடின்றி உன்னை நாள் முழுதும் ஏத்துதற்கு எனக்கும் அருள் புரிவாயாக' என்று பொருள் கூறும். போப் அவர்கள் பதிப்பில் மேற் சொன்ன பாடபேதம் 'எனக்கும்' என்று காணப்படினும், அவர் பாடலின் பிற்பகுதியை 'In grace bestow to thy glorious foot, THAT I MAY ceaseless praise' என மொழிபெயர்த்திருப்பது, 'எனக்கு' என மொழிபெயர்த்திருப்பது, 'எனக்கு' என்ற சொல்லையே அவர் சரியான பாடமாகக் கருத்திற் கொண்டிருந்தார் எனப் புலப்படுத்தும். 'THAT I TOO MAY' என்று அவர் மொழி பெயர்க்கவில்லை என்பதும் நாம் கருத்திற்கொள்ள வேண்டிய தொன்றும்.

8. திருச்சதகத்தில் 73வது பாடலில், 'நின் கழற்கணே மெய்கலந்த அன்பர் அன்பு எனக்கும் ஆக வேண்டும்' என்ற இடத்தில் உள்ள 'எனக்கும்' என்ற சொல் பொருத்தமாக அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். இங்கு எடுத்துக்கொண்ட பாடலில் 'ம்' இருப்பதாலும், இல்லாமையாலும் எழக்கூடிய உரை வேற்றுமையை நாம் கவனத்திற்கொள்வது அவசியமாகும். 'எனக்கும்' என்பது சரியான பாடமானல் 'நின்னை முழுவதும்

ஏத்துதற்கான நிரந்தரமான அன்பை இரந்த எல்லாம் எமக்கே பெறலாம் என்ற அன்பர்களுக்குக் கொடுத்திருப்பது போன்று எனக்கும் அருள்வாயாக' என்றுபொருள்படும். ஆனால். 'எனக்கு' என்பதுதான் சரியான பாடமானால், மேற்சொன்ன பொருள் பொருந்தாததோடு முரண்பாடானதும் கூட என்பதைப் பின் வரும் விளக்கங்களால் அறியலாம். அதோடு, பாடலின் முற் பகுதிக்குச் சரியான பொருள் கண்டால்தான் பிற்பகுதியின் இயல்பான கருத்தை நாம் புரிந்துகொள்ள முடியும் என்பதும் புலப்படும். பிற்பகுதியைச் சரியாகப் புரிந்து கொண்டால்தான் முற்பகுதியின் முழுமையான கருத்தை நாம் உணர முடியும் என்று மாற்றிச் சொல்லினும் பொருத்தமே.

9. இப்போது, ஒரு எடுத்துக்காட்டாகத் திருச்சதகத்தின் 16வது பாடலைப் பார்ப்போம். இதன் பொருள் எளிதாக விளங்குவது ' இறைவனே, வானவர்கள் தங்கள் சுயநலம் கருதி நின்னை வாழ்த்துகின்றார்கள். தாம் வாழ்வதற்காகவே நின்னை வாழ்த்துகின்றார்கள். நின்னை அவர்கள் நினைத்தலின் குறிக் கோள், பிறர் எல்லாம் இதைப் பார்த்துத் தம்மை உயர்ந்தவராகக் கொண்டு தம்மைத் தொழவேண்டியே. ஆனால். நான் உன்னைப் பரவும் நோக்கம் பாழான இப்பிறப்பை நீக்குதற் பொருட்டே யாம்' என்பது அப்பாடலின் பொருள். இங்கே, வானவர்களும் இறைவனுக்கு அன்பர்கள்தாம். அவர்களும் இறைவனை வாழ்த்தத்தான் செய்கின்றார்கள். அடிகளும் வாழ்த்துகின்றார். ஆனால், வானவர்கள் வாழ்த்துவது தம் நலன் கருதி; தாம் வாழவும், பிறர், தம்மை உயர்ந்தோராகக் கொண்டு வாழ்த்தவும் கருதி. ஆகவே, தான் பரவுதலின் ஒரே நோக்கத்தைச் சொல்லும் முகத்தால் அடிகள் சுயநலமும் பகட்டையும் கருதிய வழிபாடு தனக்கு உடன்பாடன்று என வலியுறுத்துவதை இப் பாடலில் காண்கின்றோம்.

10. திருச்சதகத்தின் 5வது பாடலில், தானே இறைவனைத் தண் மலரிட்டு முட்டாது இறைஞ்சேனே என மணிவாசகர் வருந்துவதை அறிவோம். ஆகவே, பரந்து பல் ஆய் மலரிட்டு முட்டாது இறைவனது அடியே இறைஞ்சும் அடியவர்களை மணிவாசகர் மிக உயர்ந்த அன்பர்களாகக் கருதுவார் என்பதில் ஐயம் என்ன. ஆனால், அவர்களே இறைவனை இறைஞ்சுவ தோடு நில்லாது, பலன் விரும்பி, இறைவனிடம் இரப்பார்க ளானால், மேலும், இறைவன் தருவது ஒன்றையும் பிறர் பெற லாகாது என்னும் கருத்தோடு எல்லாவற்றையும் தாமே பெற வேண்டும் என விரும்பி இரந்தால், அவ்வழிபாடு

மணிவாசகருக்கு உடன்பாடாகுமா? இவ் வினாவிற்கான விடையை நாம் மணிவாசகர் வாக்குகளினின்று காண்போம்.

11. அணைந்தோர் தன்மையைப் பேசுமிடத்து, இறைவனின் 'இணையடியே சிந்தித்து இருந்து இரந்துகொள் நெஞ்சே. எல்லாம் தரும் காண்' என மணிவாசகர் தன் நெஞ்சுக்கு அறிவுறுத்துவார். 'இருந்து' என்பது அவரை ஆண்டு அவர் மனத்தே மருந்துருவாய் வந்து இருக்கும் இறைவனின் குறிப்பே குறிக்கொண்டு என்பதாம் (47–10)* இப்படி இருந்து இரக்கும் நிலை, அவன் 'மனத்தான், கண்ணின் அகத்தான் மறுமாற்றத்து இடையானக' இருக்கும் நிலை. அந்த நிலையிலே மணிவாசகர் சொல்லுவார்: வேண்டத்தக்கதை இறைவன் அறிவான், வேண்ட முழுதும் தருவான் என்று. அப்படித் தருவானெனினும் அவர் வேண்டினரில்லை, தனக்கு வேண்டும் பொருள் ஒன்று உண்டு என்னில் அதுவும் அவன் தன் விருப்பென விடுத்து அவனைக்கோராது வாளா இருந்தார் (33–6) வேண்டாது ஒன்றும் வேண்டாது இறைவனிடம் மிக்க அன்பே மேவுதலே வேண்டுமென்றார் (32-4) இடர் நீங்கி இறையனுபவம் எய்தவேண்டுமே என ஏங்கின காலத்தும் அவனே அருளுவான் என்றிருந்து 'உணர்த்தாது ஒழிந்தே கழிந்தொழிந்தேன்' என்பார் (32–7). மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும் அண்ணு எண்ணக் கடவேனே' என்று சொல்லி அடிமையான தான் இப்படி எண்ணக்கூட உரிமையை விரும்பேன் என்பார் (33-9). ஆகவே, பொதுவாக (அவன் அருள் தவிர்த்து), எதையும் இரத்தலைத் தவிர்த்தலையே அடிகள் விரும்பினர் என நாம் அறியலாம். சொல்லப்பட்ட பாட்டில் பேசப்படும் அன்பர்கள் இறைவனிடம் இரந்தது (உலகப் பொருள் ஒன்றும் இல்லை) பரிபாகமுற்ற ஞானத்தையும் அதற்கு வாயிலான சாதனங்களையுமே என்று ஒரு உரை பேசுவதை முன்னமே கண்டோம். ஆனால், இப்படி ஊகிக்கப் பாடலில் ஆதாரம் இல்லை என்பது வெளிப்படை,

12. இறைவனை இரந்தாலும் அவன் அருளும் நலன்களை அன்பர்கள் தமக்கே உரிமையாக்கிக்கொள்ள விழைவதை அடிகள் விரும்பார். யான் எனது என்று அவரவரை இறைவன் கூத்தாட்டுகின்றான் (5-15); நான், எனது, யாம், எமது என்பதெல்லாம் மாயையால் வந்த மயக்கம் (41-3, 45-3);

* இவையும், இவைபோன்று பின் வரும் எண்களும் முறையே பதிக எண்ணையும் பாடல் எண்ணையும் குறிப்பன.

யான், எனது என்ற உரைகள் மாயவேண்டும் (31–5); இவை போன்ற யாவும் அறவேண்டும் (32–5) என்று சொன்ன அடிகள், அன்பர்கள் இறைவனிடம் 'இரந்த எல்லாம் எமக்கே பெறலாம்' என்பதை விரும்பார் அன்றே.

13. திருச்சதகத்தின் முழுமைக்குமே கொடுத்துள்ள தலைப்பு பத்தி வைராக்கிய விசித்திரம் என்பது. வைராக்கியம் என்ற வட சொல்லின் பொருள் அவா அற்றிருத்தல். அதாவது, உலகப்பொருள்கள் மீது ஆசையின்மை. ஆகவே, தலைப்பின் பொருள், பத்தியாலும் அவா அற்றிருத்தலாலும் ஏற்படும் வியக்கத்தக்க விளைவு எனலாம். பத்தியானது வரம்பிகந்த அன்பின் முதிர்வு என்றும், பத்தி தோன்றவும் (வைராக்கியம் விளையும் அதாவது) உலகப் பொருள்களிடத்திருந்த பற்று அறும் என்றும் விளக்கியுள்ளார்கள். பதிகத்தலைப்பிற் கிணங்க திருச்சதகத்தில் பெரும்பாலான பாடல்கள் பத்தியையும் ஆசை அறுதலையும் இணைத்தே பேசுவதை நாம் அறிவோம். மேலும், முதல் பத்துப் பாடல்களுக்கு மெய்யுணர்தல் எனத் தனித் தலைப்புள்ளதையும் நாம் கருத்திற் கொள்ளவேண்டும். மெய்யுணர்தலென்பது நாம் நுகரும் பொருள்களின் நிலையாமை கண்டு நிலையான இன்பத்தையும் இன்பப்பொருளாகிய இறைவனையும் அனுபவத்தால் உணர்தல் என விளக்கம் கண்டுள்ளார்கள். திருச்சதகத்தின் முதல் பத்துப் பாடல்களில் நாம் விளக்கம் காண விரும்பும் 6வது பாடலில் சொல்லப்பட்ட பொருள் இரு தலைப்புக்களுக்கும் இயைபுடையதாகவே உள்ளமை நம் கவனத்திற்குரியது சொல்லப்பட்ட அன்பர்கள் பன் மலரிட்டு இறைவனது அடியே இறைஞ்சியும் 'இரந்த எல்லாம் எமக்கே பெறலாம்' என ஆசையுற்றதாலே இறைவன் அவர் நெஞ்சில் நில்லானுயக் கரந்தானென்க. உய்யல் ஆம் புத்தி தந்து தன் பொற்கழற்கணே பன்மலர் கொய்து சேர்த்தலும் முத்தி தருவானும் அவன் (42–6). நீர் மலரும் தொண்டர்க்கு வழுவாதாம் அவன் மலர்ச் சேவடி (42–8). ஆகவே, அவர்கள் பூசனை செய்தும் ஆசையை நீக்குமளவிற்கு (உய்யல் ஆம்) பத்தியை அவர்கள் பெறவில்லை என மணிவாசகர் குறிப்பாக உணர்த்தினர் போலும். மேலும், அடிகள் (16வது பாடலில் வானவர்களின் இறை வழிபாட்டில் குறை பாட்டைக் குறிப்பாக உணர்த்தியது போன்று) 'நின் வார் கழற்கண் அன்பு எனக்கு நிரந்தரமாய் அருளாய் நின்னை ஏத்த முழுவதுமே' என்று அருள் வேண்டும் முகத்தால், சொல்லப்பட்ட அன்பர்களின் பூசை ஆசை காரணத்தால் இடையீடு பட்டமையையும் முழுமை பெறுமையையும் உணர்த்தினரென்க.

14. சிவமே பெறும் திரு — திருவடிக்காம் பவமே அருளு கண்டாய் (5–5); நின் கழல் இணையலாது இலேன் (5–72) அறவே நின்னைச் சேர்ந்த அடியார் மற்றொன்று அறியாதார் (5-86); நின் மலர் கொள் தாள் இணை வேறு இலாப் பதப் பரிசு (5-93); இரவும் பகலும் எழிலார் பாதப் போது ஆய்ந்து அணைவது (27–9); எண்ணுது இரவும் பகலும் நான் அவையே எண்ணும் அதுவல்லால் (33–9); புகழ்மின், தொழுமின், பூப் புனைமின் புயங்கன் தாளே புந்தி வைத்திட்டு (4[illegible]–6) என்பன போன்ற அடிகளது வாக்குகள் இடைவீடின்றி முழுமை பெறும் இறை வழிபாட்டை உணர்த்துவனவாம். பேசப்பட்ட அடியவர் களது வழிபாடு முழுமை பெற்றிருந்தால் இறைவன் அவர் பூசனை உகந்து அவர் சிந்தையிற் புகுந்து அவர்க்குத் தன் பூங்கழல் காட்டியிருப்பான் (37–7), கள்வனுகி அவர் உள்ளங் களினின்று கரந்திரான்.

15. 'கரந்து நில்லாக் கள்வனே' என்ற தொடரைத் தான் மொழி பெயர்த்த முறைமைக்குச் சான்று காட்டுவார் போல் போப் அவர்கள் தன் புத்தகத்தில், உரிய பக்கத்தின் அடிக் குறிப்பிலே, திருவண்டப்பகுதியின் 125வது அடியிலிருந்து (145வது அடி வரையில்) சொல்லப்பட்ட விஷயங்களை நம் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். அவ்வடிகளிலே, மாணிக்கவாசகர், அன்பராகி மற்று அருந்தவம் முயலும் ஒரு ஒன்பது வகையினரைப் பற்றி விவரித்து அவர்களுக்கெல்லாம் அறியப்படாது இறைவன் ஒளிக்கின்ருன் என்பார். திருவண்டப் பகுதியின் மையக் கருத்தை நாம் அறிய முற்பட்டால், பத்தி வலையிற் படுவோனுகிய இறைவன் 'அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டுத் தொண்ட' உழவர்க்கே தன்னைத் தருகின்ருன் என்ற அடிகளது கருத்துப் புலனுகும். இறைவனை ஆற்றல் மிக்க அன்பால் அழைத்து அவன் கழல் பேணினல் தான் அவனை வசப்படுத்த முடியும்; அந்தப் பத்தியை மேற்சொன்ன அருந்தவர் பெற்றிலர் என்பது அடிகளது குறிப்பு.

16. 'கரந்து நில்லா' என்ற இரு சொற்களையும் உடன் கொண்டுதான் பொருள் காணவேண்டும். அப்பொருள் 'ஒளித்து நில்லாத' என்பதுதான் என்பதற்கு எங்கேனும் இலக்கண விதிகளோ சான்றுகளோ உளவோ, இலவோ யான் அறியேன். இப்படி விதி இருந்தாலும், அடிகளது பல கருத்துக் களை மனத்திற்கொள்ள வேண்டுமாதலால், முற்றிலும் புதிய தொரு கோணத்தில் தான் உரை காணவேண்டி வரும். இரந்த எல்லாம் எமக்கே பெறலாம் என்ற அன்பர்கள் அவா

வெள்ளத்து அழுந்தியும், ஆகவே, அவர்கள் வழிபாடு முழுமை பெருதிருந்தும் அன்னார் உள்ளங்களிலின்று இயல்பாக மறைந்து நிற்கவேண்டிய நீ கரவாது நிற்கின்றாயே; நீ கள்வன் தான் எனச் சொல்லவேண்டி வரும். அறிஞர் உலகம் சிந்திக்குமாக; தெளிவிக்குமாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi

I had the great honour of visiting this famous temple. I must praise the services of the temple authorities and the way in which the temple is kept clean.

(Sd) K. SELVARATHINAM,
District Magistrate
of Tanjore

24—12—69

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi

இங்குப் பணிபுரியும் எல்லோரும் சிறப்புடன் தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

ஆண்டுதோறும் இங்கும் இன்னும் பல ஸ்தலங்களுக்கும் நாங்கள் வர வேண்டுமென்றும் பிரார்த்திக்கிறோம்.

(Sd) வி. தி. சம்பந்தன்
Minister for Posts and Tele communication
MALAYSIA.

25—12—69

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னுகரம்,

**சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்**

( மலர் 28, இதழ். 11 பக்கம் 649 இன் தொடர்ச்சி )

ஒற்றை ஆடையுடன் எந்தக் கிரியையையும் செய்யக் கூடாது. ஸ்னனம், யாகம், உணவு இவைகளை ஒரு வஸ்திரத்துடன், கௌபீனமாத்திரத்துடன் செய்யக்கூடாது.

(ஞானரத்னுவளி)

ஸ்னனம் என்பது :- வாருணம், ஆக்னேயம், திவ்யம், வாயவ்யம், மானஸம் என ஐந்தாகும். ஜலத்தில் செய்யப்படும் ஸ்னனம் வாருணம் எனப்படும். விபூதியினுல் செய்யப்படும் ஸ்னனம் ஆக்னேயம் எனப்படும். வெய்யிலுடன் கூடிய மழையில் செய்யப்படும் ஸ்னனம் திவ்யம் எனப்படும். பசுக்களுடைய தூளியில் செய்யப்படும் ஸ்னனம் வாயவ்யம் எனப்படும். மனதினுல் மந்திரங்களை உச்சரித்துச் செய்யப்படும் ஸ்னனம் மானஸ ஸ்னனம் என்று பெயர். (காமிகம்)

முதலில் ஜல ஸ்னனம் செய்துவிட்டுப் பிறகு ஆக்னேய ஸ்னனம் செய்யவேண்டும். ஜல ஸ்னனம் செய்யவும் முடியாத காலத்தில் ஆக்னேய ஸ்னனம் செய்யலாம். (மதங்கம்)

भूयोभूयोंभसि स्नानं सेवमानस्य रुग्भवेत् ।
तस्मात्तत्सततंनेष्ट मिष्टमाग्नेय मुच्यते ॥

ஜலத்தில் அடிக்கடி ஸ்னனம் செய்தால் பிணி உண்டாகும் ஆதலால் ஆக்னேய ஸ்னனம் அடிக்கடி செய்யலாம்.

(ஸ்வாயம்புவம்)

ப்ராதக்காலாநுஷ்டானம் மாத்தியந்தின அநுஷ்டானம் சாயங்காலாநுஷ்டானம், நிசி கால அநுஷ்டானம் இவைகளிலும், உணவு உண்டும், உறங்கி எழுந்தும், தண்ணீர் பருகியும், விபூதி அணியவேண்டும். மற்றும் ஸ்த்ரீ, சூத்ரன், பூனை, எலி

இவைகளைத் தொட்டாலும் ஆக்னேய ஸ்னானம் செய்ய வேண்டும். (மதங்கம்)

भर्स्सनात्सर्वपापानां दोषाणां च महा मुने।
भस्मेति कीर्त्तितं रक्षा रोगाणां चविभर्त्सनात् ॥

தோஷங்களை அதட்டி விரட்டுவதாலும் பஸ்ம என்று பெயர் வந்தது. (மதங்கம்)

விபூதியானது கற்பம், அனுகற்பம், உபகற்பம் என்று மூன்று விதம். நல்ல பசுவின் சாணத்தைப் பூமியில் விழாமல் தாமரை இலையில் ஏந்தி சுத்தமான இடத்தில் அந்த சாணத்தின் மேலிருக்கும் வழுவை நீக்கி உண்டை செய்துக் காய வைத்து, முன்பே வளைத்திருக்கிற சிவாக்னியிலிட்டு, பக்குவமாக வெந்தபின் எடுத்து, மந்திரம் சொல்லி புதுப்பானையில் வைத்துக்கொண்டு, வேண்டும்போது அணுவளவும் பூமியில் சிந்தாமல், எடுத்துக்கொள்ளவேண்டும், இது கற்பம் எனப் படும்.

சாதாரணமாகப் பூமியில் விழுந்த பசுவின் சாணத்தை கோமயம் விட்டுப் பிசைந்து சிவாக்னியில் பக்குவம் செய்து எடுப்பது அனு கற்பமாகும்.

எவ்வித ஸம்ஸ்காரமுமின்றி லௌகிகாக்னியால் பக்குவம் செய்தெடுக்கப்பட்ட விபூதி உபகற்பமாகும்.

ஸர்வ தீர்த்தங்களிலும் செய்யப்படும் ஸ்னானத்தினால் எந்த பலனோ அந்தப் பலனை விபூதிஸ்னானமளிக்கும். மற்றும் சோபையைத் தரும், தூய்மையளிக்கும், புண்யப்ரதம், ஜ்வரம் அபஸ்மாரம் இவைகளை நீக்கும். ப்ருமராக்ஷஸம் பேய் இவைகளுடைய பயம் நீங்கும். ஆயிரம் தடவை கங்காஸ்னான பலன் உண்டாகும். அணுமாத்திரமான விபூதி அணிந்தால் சர்வஸ்னான பலன் உண்டாகும்.

ஒரு கையால் விபூதியணிவதும் கீழ்நோக்கியவாறு விபூதியணிவதும் கூடாது. அவ்வாறு செய்பவர் ச்வான யோனியில் பிறக்கிறார்கள். (த்விசதிகாலோத்தரம்)

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் அழித்தொழிக்கும் பாவனையில் திரிபுண்டரமாக விபூதியை

முப்பத்திரண்டு பதினறு, பன்னிரண்டு, எட்டு, ஐந்து என்னும் ஸ்தானங்களில் தரித்தல் முறை. இதனுலே அவ்வவ்வத் தானங்கள் சுத்தியெய்த அவற்றின் அதிதேவதைகள் பிரசன்னராய் மலபந்தம் நீக்கமான பாவனையாம்.

சிரசு, நெற்றி, மார்பு, குய்யம் ஆகிய இடங்களில் முறையே ஈசானுதி நான்கும் ஆகும். மற்றைய இடமெல்லாம் சத்தியோஜாத மந்திரமாகும். நெற்றி, இருதயம், தோள்கள் புயங்களில் அவ்வாறங்குலமும் மற்றையவிடங்களில் வருணங்களுக்கேற்ப ஆறு, நான்கு, இரண்டு, ஒன்று என்னும் அங்குல ப்ரமாணமுமாகத் தரித்தல் வேண்டும்.

— சைவ-நெ. 151.

விபூதியை உத்தூளனம் செய்துகொள்ளுவதினுல் ஆகர்ஷண சக்தி உண்டாகும். உத்தூளனம் செய்துகொள்ளுவது கீழிருந்து மேலாகப் பூசிக்கொள்ளவேண்டும்.

(உத்துங்க சிவபத்ததி)

மானஸஸ்னனம் என்பது:— மும்மலம் நீக்கப்பெற்ற ஆன்மாவும் தேஹமும் பரிசுத்தமெய்துவதற்காக அமிருத ப்ரவாகத்தினுல் உள்ளும் புறம்பும் நனைத்தலாகும் பாவனை; இந்த ஸ்னனத்திற்கு சிவமூலமந்திரம் முக்கியம்.

सकळीकरणं कृत्वा प्राणायामेन संस्थितः ।
त्रिस्समावर्तयेन्मन्त्री मनसाशिव संहिताम् ॥
पूर्ववत्पुनराचम्य विधाय श्रोत्रवन्दनम् ।
कृत्वा करांगविन्यास मेकचित्तो व्यवस्थितः ॥
ब्रह्मीं च वैष्णवीं रौद्रीं रक्तां शुक्लांसितेतराम् ।
प्रातर्मध्यान्हके सायं सन्ध्यां ध्यायेदनुक्रमात् ॥

— சோமசம்பு.

ஸகளீகரணம் செய்துகொண்டு பிராணயாமம் மூன்று தடவை செய்து மனதினுல் சிவசம்ஹிதாமந்திரத்தை நினைத்து ஆசமனம் செய்து அபிவாதனம் செய்து கரநியாஸம் அங்க நியாஸங்களை ஒருமனதுடன் செய்து காலையில் ப்ராம்மியையும் மாத்தியந்தினத்தில் வைஷ்ணவியையும் மாலையில் ரௌத்ரியையும் நினைத்து தியானித்து முறையாக சந்தியாநுஷ்டானம் செய்யவேண்டும்.

சகளீகரணம் என்பது:- அங்கநியாஸ கரநியாசங்களால் கைகளையும் சரீரத்தையும் சிவஸ்வருபமாகச் செய்தல்.

ப்ராணுயாமம் என்பது, மூக்கில் வலத்துவாரத்துப் பிங்கலை நாடியால் அகத்தேயுள்ள அசுத்தவாயுவைப் பன்னிரண்டு மாத்திரைக்காலம் வெளியில் விட்டு இடத்துவாரத்து இடைகலை நாடியால் புறத்தேயுள்ள சுத்தவாயுவை ஆறு மாத்திரை காலம் இழுத்து உள்ளே பூரித்து பூரித்த வாயுவை சுழுமுனை என்னும் நடுநாடியிற் செலுத்தி 16 மாத்திரை காலம் நிறுத்திலை இதற்குக் கும்பகம் எனப் பெயர். பிறகு மறுபடியும் ரேசகம் பூரகம் கும்பகம் செய்யவேண்டும். ஒவ்வொரு பிராணுயாமம் தோறும் வலக்கையால் வலச்செவியைத் தொடவேண்டும். இது அசுத்தவாயுவின் அசுத்தம் நீங்குவதன் பொருட்டுச்செய்யப்படும் சுத்தி, கும்பகம் செய்யும்போது மந்திர உச்சாரணத்துடன் செய்வது ஸகர்ப்பப் பிராணுயாமம் என்றும், மந்திரமில்லாமல் செய்யும் பிராணுயாமத்திற்கு அகர்ப்பப் பிராணுயாமம் என்றும் பெயர்.

சுட்டுவிரல் நடுவிரல்களை மடித்துப் பெருவிரலையும் அணிவிரலையும் சேர்த்து மூக்கைப் பிடித்து முறையே மூடித் திறக்க வேண்டும்.

மாத்திரை கால அளவு:- தனது முழங்காலை கைவிரலை சொடிக்கிக்கொண்டு மும்முறை சுற்றுதல் ஒரு மாத்திரையாகும்.

பிராதக் காலத்தில் செய்யப்படும் அனுஷ்டானம்:- ஆகாயத்தில் நக்ஷத்திரம் தோன்றும்போதே தருப்பணம் செய்வது உத்தமம். அவைகள் ஆகாயத்தில் மறைந்தபின் தருப்பணம் செய்வது மத்தியமம். சூரியன் பாதி உதயஞ்செய்யும்போது தருப்பணம் செய்வது கனிஷ்டமாகும். மத்தியான சந்திக்கு மத்தியானத்திற்குமுன் ஒரு நாழிகையிலே செய்தல் மத்தியமம். பதினைந்தாம் நாழிகையாகிய மத்தியானத்தில் செய்தல் உத்தமம். அதன்பிறகு ஒரு நாழிகையில் செய்வது கனிட்டம், சாயங்கால சந்திக்கு:- சூரியன் பாதி அஸ்தமனஞ் செய்யும் காலம் உத்தமம். அஸ்தமனமானபின் நக்ஷத்திரங்கள் தோன்றுமுன் செய்வது மத்தியமம். நக்ஷத்திரங்கள் தோன்றும் போது செய்வது கனிட்டம். — மோஹ சூரோத்தரம்.

(தொடரும்)

# நிலை வேறுபாடுகள்

வித்துவான். திரு. சு. சாமிஐயா, M. O. L.

மருத்துவர்கள், உடற்கூறு நிலைகளைத் தெளிவுறத் தெரிந்த பின்னரே மருத்துவம் செய்தற்குத் தகுதி வாய்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். உடலின் உட்பகுதிகளைப் படமாக வரைந்தும் உயிர் நீங்கிய உடலினைப் பகுத்துப்பார்த்தும் தெரிந்து கொள்கின்றனர். உயிர் நீங்கிய நிலையில் மக்கள் உடலை வகிர்ந்து பார்க்கின்றனரே அன்றி உயிர் இருக்கும் காலத்து உள் நிகழும் செயல்பாடுகளை முற்றிலும் அறிந்துகொண்டார்கள் என்று கூறி விடுதற்கு இல்லை. உடல்நிலை வளர்ப்போர்க்கு இது எவ்வாறு இன்றியமையாதது ஆயிற்றே அவ்வாறே உயிர் நிலை வளர்ப்போர், உயிரின் பல்வேறு நிலைகளை நுனித்து அறியவேண்டியது இன்றியமையாததாய் அமைந்தது. அதனை உற்றுணர்வாலும், யோகப் பயிற்சியாலும், அனுபவ முதிர்ச்சியாலும், ஞான எழுச்சியாலும் கண்டுணர்ந்து கட்டுரைத்தனர். அதன் நிலையினையே சித்தாந்த நூல்கள் 'அவத்தை' என்று குறிப்பிடுகின்றன. அவத்தை என்பதற்கு 'நிலை' என்பது பொருளாகும். State, Condition, Situation என்ற மூன்று ஆங்கிலச் சொற்களால் குறிப்பிக்கப்படும் பொருளையே நாம் அவத்தை அல்லது நிலை என்ற சொல்லாற் குறிப்பிக்கப்படும் பொருளைக் கொள்கின்றோம். அகப்பொருள் நூல்கள், காட்சி, வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல், ஆக்கம் செப்பல், நாணுவரை யிறத்தல், நோக்குவவெல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு எனப் பத்து அவத்தைகளைக் குறிக்கின்றன. உள இயலாரும் Cognitive (அறிவு), Conative (செயல்), emotive (உணர்ச்சி) என உள நிலையைப் பகுத்துள்ளனர். இதனையே ஃபிராய்டு என்பார் id, ego, superego எனப் பகுத்துள்ளார். இவற்றை உணர்ச்சியே தலைதூக்கிய நிலை, உணர்ச்சியும் அற உணர்ச்சியும் மாறி மாறி வருகின்ற நிலை, அறவுணர்ச்சியே மேலோங்கிய நிலை என ஒருவாறு கூறலாம். இவைபோல உயிர் நிலையினைக் காரண நிலை (காரணவத்தை) காரிய நிலை (காரியாவத்தை) என இருகூறுக்கி, அவற்றுள் காரண நிலை கேவலம், சகலம், சுத்தம் எனவும்; காரிய நிலை கீழாலவத்தை, நிலையிற்படுமவத்தை, சுத்தாவத்தை எனவும் பகுத்து, சித்தாந்திகள் கூறினர். உயிரற்ற உடற் கூறுகளை

வகிர்ந்து பார்த்து உயிர் உள்ள உடலுக்கு மருந்து கொடுத்தல் போல, நேரிற்காணும் சகலநிலையின் நிலைகளை அனுபவத்தாற் கண்டுணர்ந்து கேவலநிலை சுத்தநிலைகளைத் தெளிவுறுத்தியுள்ளனர்.

இவற்றுள் கேவலநிலை உயிர் இயற்கை மலத்தோடு இருள் நிலைப்பட்டுக் கிடக்கும் நிலை ஆகும். இதனை,

"கேவல சகல சுத்த மென்றுமூன் றவத்தை யான்மா
மேவுவன் கேவ லந்தன் னுண்மையெய் பொறிக ளெல்லாங்
காவலன் கொடுத்த போது சகலனு மலங்க ளெல்லா
மோவின போது சுத்த முடையனுற் பவந்து டைத்தே"

எனச் சித்தியார் கூறுகின்றது. சகலநிலை உடம்பும் உறுப்புக்களும் பெற்று இவ்வுலகிடையே வாழும் நிலை ஆகும். பின்பு எல்லா மலங்களும் நீங்கப்பெற்றுச் சிவத்தோடு கூடிநிற்கும் நிலை சுத்தம் என்று உரைக்கப்பெறும். இம் முந்நிலையினையும்,

"காரிட்ட ஆணவக் கருவறையி லறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போற்
கட்டுண் டிருந்த வெமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட்(டு) அதற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவினை யமுதமூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவினை யாட்டமைத்திட்(டு)
ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பி னமனைவிட்
டிடருற உறுக்கி இடர் தீர்த்(து)
"இரவுபக லில்லாத பேரின்ப வீட்டினி
லிசைந்துதுயில் கொண்மின்!" என்று
சீரிட்ட வுலகன்னை வடிவான வெந்தையே!
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே"

என்று தாயுமானார் தெளிவுறுத்துகின்றார். விதையினைச் சேமித்து வைப்போன் அதனை நன்கு காயவைத்து, சீர்படுத்தி, கோட்டை கட்டி அடுக்குவான். அதுபோழ்து அவ்விதைக்கு ஒரு செயற்பாடுமில்லை. கோட்டையின்றுளிலே உமியோடு சேர்ந்து இருளிற் கிடக்கின்றது. உயிரும் ஆணவமலத்தோடு ஒன்றி இருளில் கிடக்கும் கேவல நிலையினை இதனோடு ஒப்பிடலாம்.

பருவம் வந்த காலத்து உழவன், விதையினை எடுத்து நீரும், வெப்பமும் அளவோடு கொடுத்து மண்ணில் இட்டு முளைக்கச் செய்கின்றான். பயிர் வளர்ந்து மண்ணில் வாழ்கின்ற நிலையோடு, ஆண்டவனால் கருவி கரணங்களெல்லாம் கொடுத்தும் உடல்கொடுத்தும் வாழவைக்கின்ற சகல நிலையினைப் பொருத்திக் கூறலாம். வளர்ந்து விளைந்த நெல்லினைப் பக்குவம் அறிந்து, அரிந்து தூய்மைப் படுத்தித் தவிடும் உமியும் நீக்கி அரிசியாக ஆக்கிய நிலை போன்றது சுத்தநிலையாகும். உவமை என்பது ஒருபால் ஒற்றுமை யுடையதே ஆகும். எனவே மேற்காட்டிய உவமைகளும் எல்லா நிலைகளிலும் பொருந்தா எனினும் விளக்கத்திற்காகக் காட்டப்பட்டன எனக் கொள்ளுதல் வேண்டும்.

கேவல நிலையில் ஆன்மாவிற்கு உடம்பில்லை, கலாதி அறிவில்லை, புத்தி குணங்கள் இல்லை, அறிவில்லை, இச்சை இல்லை, தொழில் இல்லை, சுதந்திரம் இல்லை, போகம் இல்லை, தோற்றக் கேடுகள் இல்லை, ஏக தேசியாதல் இல்லை. இதனை,

" அறிவில னமூர்த்த னித்த னராகாதி குணங்க ளோடுஞ்
செறிவிலன் கலாதி யோடுஞ் சேர்விலன் செயல்க ளில்லான்
குறியிலன் கருத்தா வல்லன் போகத்திற் கொள்கை யில்லான்
பிறிவிலன் மலத்தி னோடும் வியாபிகே வலத்தி லான்மா "

என்ற சித்தித் திருவிருத்தத்தால் அறியலாம்.

சகல நிலையில் ஆன்மாவிற்கு உருஉண்டு, கலாதியோடு சேர்தல் உண்டு, புத்திகுணம் எட்டும் உண்டு, இச்சையை அடைதல், அறிவு பெறுதல், தொழிலுறுதல், சத்தாதிகளில் விருப்புறுதல், போகம் நுகர்தல், தோற்றக்கேடுகள் பெறுதல், ஏகதேசியாதல் முதலியனவும் உண்டு.

" உருவினைக் கொண்டு போக போக்கியத் துன்னல் செப்பல்
வருசெயன் மருவிச் சத்த மாதியாம் விடயந் தன்னில்
புரிவதுஞ் செய்திங் கெல்லா யோனியும் புக்கு ழன்று
திரிதருஞ் சகல மான வவத்தையிற் சீவன் சென்றே "

என்ற சித்தியார் செய்யுள் ஆதாரமாகக் காணக்கிடக்கின்றது

சுத்தநிலையில், இருவினை ஒப்பு, சத்திநிபாதம், குருவருள் ஞானசாதனம், மும்மல நீக்கம், வாதனை நீக்கம் ஞானப்பெருக்கம் முறையே பெற்று, சகலநிலையிற் கூறப்பெற்ற பத்தும் நீங்கப் பெற்று இறைவன் திருவருளைக் கூடுகின்றதே சுத்த நிலையாகும். இக்கருத்தினை,

" இருவினைச் செயல்க ளொப்பி னீசன்றன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத்
திரிமல மறுத்துப் பண்டைச் சிற்றறி வொழித்து ஞானம்
பெருகிநா யகன்றன் பாதம் பெறுவது சுத்த மாமே "

என்ற திருப்பாடல் புலப்படுத்துகின்றது.

இனிக் கீழாலவத்தையின் முறையினைப் பார்ப்போம். உயிர் சகலநிலையில் உள்ள போழ்து அடையும் நிலைகளின் ஒருகூறே இக்கீழாலவத்தை ஆகும். இது ஐந்து நிலைப்படும். நனவு, கனவு. உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் அல்லது சாக்கிரம், சொப்பனம்; சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன வாகும். நனவு புருவ நடுவிலும், கனவு கழுத்திலும், உறக்கம் இதயத்திலும், பேருறக்கம் உந்தியிலும், உயிர்ப்படங்கல்மூலா தாரத்திலும் நிகழ்வுறும்.

இவற்றுள் சாக்கிரம் அல்லது நனவு. முப்பத்தைந்து கருவி களுடன் ஆன்மா நுதலில் நிற்கும் நிலையாகும். கருவிகள் முப்பத் தைந்தாவன :- ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, தன் மாத்திரைகள் 5, அந்தக்கரணங்கள் 4, புருடன் 1, வளிநிலை (வாயு) 10, வசனாதி 5 ஆக 35 கருவிகள்.

கனவு அல்லது சொப்பனத்தில் ஆன்மா இருபத்தைந்து கருவிகளுடன் கண்டத்தில் நிற்கும். கருவிகள் இருபத்தைந்தா வன :- தன்மாத்திரைகள் 5, அந்தக்கரணங்கள் 4, புருடன் 1, வளிநிலை 10, வசனாதி 5 ஆக 25 கருவிகள்.

சுழுத்தி அல்லது உறக்கத்தில் ஆன்மா மூன்று கருவி களுடன் நிற்கும். கருவிகள் மூன்றுவன,- சித்தம் 1, உயிர் வளி 1 (பிராணன்), புருடன் 1 ஆக மூன்றும்.

பிராணன், புருடன் எனும் இரண்டுடன் ஆன்மா உந்தியில் நிற்கும் நிலை பேருறக்கம் அல்லது துரிய நிலை ஆகும்.

ஆன்மா மூலாதாரத்தில் புருடனுடன் ஒடுங்கிக் கிடக்கும் நிலையே உயிர்ப்படங்கல் அல்லது துரியாதீதம் எனப்படும்.

(தொடரும்)

# அருணகிரியார் செய்த அலங்காரம்

செஞ்சொற்கொண்டல், புலவர்,
**திரு. சொ. சிங்காரவேலன்** M. A., Dip. Ling.

**கவிதை அலங்காரம் :**

மனிதர்கள் அழகு செய்து கொள்வதிற் பெருவிருப்பம் உள்ளவர்கள், மனிதர்கள் மட்டும் என்ன? அஃறிணை உயிர்கள் கூட விருப்பத்துடனேயோ, விருப்பத்தினையின்றியோ அழகாயிருக்கின்றன; அழகாய் இருப்பதில் ஆர்வம் காட்டுகின்றன. மனிதன் அழகு செய்துகொண்டு மகிழ்கின்ற இயல்புடையவன். தன்னை, தன் மனையை, தன் மனைப்புறத்தை, தன்னைச் சார்ந்த புறப்பொருள்களை அழகுசெய்து காண்பதிற் பெருவிருப்பம் உடைய மனிதன் வியத்தகு திறங்கொண்டு அதனை இயற்றியும் நிற்கின்றான். தன்னையே அழகுசெய்து அழகுசெய்து சலித்துப் போகின்றது மனம். தாய் சேய்க்கு ஒப்பனை செய்து மகிழ்வது போல, மனிதக்குழந்தை கடவுளின் திருமேனிக்கு அழகு செய்து பிறகு பாமாலையால், கவிதையால் வகைவகையான அணிகலங்களைக் கொண்டு அழகு செய்யும் திறம் காணலாம். நாயன்மார்களும், ஆழ்வாராதிகளும் இவ்வாறு தம் திருவாய்மொழிகளால் செய்த அலங்காரங்களும் பலவகை. அவை வாடாத அணிகளாய் விளங்குகின்றன; என்றும் விளங்கும்.

**பேசா அநுபூதி :**

அருணகிரியார் கந்தனுக்கு ஓர் அலங்காரம் செய்துள்ளார். அந்த அலங்காரம் தமிழ் அலங்காரம்; செந்தமிழ்ச் செய்யுள் ஆரம். பைந்தமிழ் மணம் வீசும் பசும்பொன் அணிகலம். சொல்லும், பொருளும் தூமணம் வீசும் ஓர் இனிய தெய்வப்பூண் அது. கந்தர் அலங்காரம் என்ற பெயருடன் கற்போர் கருத்திற் 'பேசா அநுபூதி' விளங்கவைக்கும் பெரும்புகழ் படைத்தது அச்சிறிய பெருநூல். அதனுள் எப்படியெல்லாம் அருமைக் கந்தனை அலங்காரம் செய்து மகிழ்கின்றார் அருணகிரியார்!

கந்தனுக்கு அலங்காரம் செய்யத் தொடங்கும்போது கந்தனின் தந்தை நினைவு வருதல் இயல்பே. கங்கை, பாம்பு,

கொன்றை, தும்பை, பிறைமதி ஆகியவற்றை மிக்க அழகுடன் புனைந்துள்ளவனுமிற்றே எம்பிரானின் எந்தைபிரான் என்று எண்ணுகின்றது அவ்வருளாளர் இதயம்.

" ஆற்றைப் பணியை இதழியைத்
தும்பையை, அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான்
குமாரன் க்ருபாகரனே " (1)

என்கின்றார் தொடக்கத்திலேயே. இவ்வாறு அழகுபெறஒப்பனை செய்யப்பெற்ற உத்தமனுடைய அருட் புதல்வனும் யான் செய்யும் அலங்காரத்தை ஏற்றுக்கொள்வது உறுதியே என்று எண்ணுகின்றாரா இந்த அருட்கலைஞர்.

கல்வி கற்க :

முருகனுக்குச் செய்யும் முத்தமிழ்க் கவிகளெல்லாம் அவனுக்குச் செய்யும் அற்புத அலங்காரங்கள் தாமே. ஆதலால் வேலன் கவியை அன்பாற் கற்றல் அறிவுடையார் கடன். கற்கும்போது பிழையறக் கற்றல்வேண்டும். எழுத்துப் பிழையறக் கற்றல் வேண்டும்.

" அழித்துப் பிறக்கவொட்டா அயில்
வேலன் கவியை யன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர் " (2)

ஆம்; இப்படிப்போகிறது திருப்புகழ்ச் செல்வரது தெளிந்த சிந்தனை. தெய்விகக் கவிதைகள் ஒன்றன்பின் ஒன்றாக உதிர்ந்து கொண்டே போகின்றன.

அழுவதும் அழகே :

சரவணப் பொய்கையிலே அறுமீன் முலையுண்டு அழுது விளையாடி அருட்காட்சி வழங்கிய அழகு கூறவொண்ணாதது. முருகப்பெருமான் அழுவதும் ஓர் அழகே. அந்த அழுகையின் அழகு அருணகிரியார் கவிதைக்கும் அப்பாற்பட்டுவிடுமோ?

" விரும்பிக் கடலழக் குன்றழச்
சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென்
றோதும் குவலயமே " (5)

அழகின் குருத்து - ஆம்; குருந்தாக - ஐயன்விளங்கும் தெய்விக வனப்பைத் திருப்பாட்டாக்குகின்றார் இத் தெய்வக் கவிஞர்.

## இளமை யழகு

குழந்தை யழகுடன் விளங்கிய செல்வமுருகனைக் குமரனைக் கண்டு அந்தக் கற்பனையில் அடுத்த கணமே ஈடுபட்டு மெய்ம் மறக்கின்றார் கவிஞர். இளமை யழகு, வீர அழகு, வில் வளைத்த வேலனின் வீர எழில் நினைவுக்குவர, அந்த அழகை வழிபடு கின்றார் இப்படி:

> " பெரும்பைப் புனத்தினுட் சிற்றேனல்
> காக்கின்ற பேதைகொங்கை
> விரும்பும் குமரனை "

தினைப்புனங் காக்கும் குறத்தியின் அழகைக் கொள்ளையிட வரும் வாலிப அழகு இங்கே வார்த்தைச் சித்திரமாக வரையப்படுகிறது அன்றோ? அந்தக் குமரக்கோலத்தை மெல்ல மெல்ல உள்ளினால், உள்ளத்தே அரும்பும் தனிப்பரமானந்தம். அந்தத் தித்திப்புக்கு முன்னால் உலகியல் இனிப்புக்கள் எம்மாத்திரம்? கரும்பும் துவர்க்கும்; செந்தேனும் புளித்துக் கைக்கும். அத்தகு மிகுசுவை யுடையது அப்பேரின்பம்.

## விண்ணப்பங்கள் :

அழகுக் கொழுந்திடம் அகமுருக வேண்டுகின்ற அற்புதக் கவிதைகள் பல. 'குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடும் ஐவரிற் கொட்படைந்த இப்பாச நெஞ்சனை யீடேற்றுவாய்' (14) 'ஐவர்க்கு இடம்பெறக் காலிரண்டோட்டி அதில் இரண்டு கை வைத்த வீடு (உடம்பு) குலையுமுன்னே வந்து காத்தருளே' (23) 'இளைத்துத் தவிக்கின்ற என்னை எந்நாள் வந்து இரட்சிப்பையே' (32) 'புத்தித் தரங்கம் தெளிவது என்றோ?' (35) 'உதித்து ஆங்கு உழல்வதும் சாவதும் தீர்த்து எனை உன்னில் ஒன்று விதித்து ஆண்டு அருள்தரும் காலம் உண்டோ?' (39) 'கற்ற கல்வியும் போய்ப் பைவரும் கேளும் பதியும் கதறப் பழகி நிற்கும் ஐவரும் கைவிட்டு மெய்விடும்போது உன் அடைக்கலமே' (85) 'விதிதனை நொந்து நொந்து இங்கே யென்றன் மனம் வேகின்றதே' (98) 'காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்' (99) என்றெல்லாம் தம் நெஞ்சுருகி அருணகிரியார் விடுக்கும் விண்ணப்பங்கள் நம் கண்களை நனைக்கின்றன.

**உலகின் பொருட்டுப்பரிவு :**

இவ்வாறு தமக்காக நோகும் தண்டமிழ்க் கவிஞர் உலகின் மாந்தரை நினைத்து உருகும் இடங்களும் இவ்வலங்காரத்துட் பல வருகின்றன. 'உண்மை அறியாது ஓடிக் கெடுகின்றதே உலகம்; இஃது என்று உண்மையான அவன் திருவடிகளைப் பற்றி உயர்வதே மெய்யாக உயர்வது என்றறிந்திடும் உணர்வு பெற்றிடாதோ' என்று கனிகின்ற கவிதைகள் பல. வையத்தார் பொருட்டு வருந்தும் கருணைக் கசிவு அங்கெல்லாம் காண்கின்றோம்.

'தீயவழிச் செல்லாது மனத்தைத் தடுத்து, வெகுளியை நீங்கி, அன்போடு பிறர்க்குக் கொடுத்து உள்ளத்தை ஒரு நெறிப் படுத்திவிட்டால், முருகன் அருள் தானே உமக்கு வந்து வெளிப்படும்' என்று நெறிகாட்டுகின்றார் இப்பெரியார்;

" தடுங்கோள் மனத்தை விடுங்கோள்
வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோள் இருந்த படியிருங்
கோள் எழுபாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றம்
திறக்கத் துளைக்க வைவேல்
விடுங்கோன் அருள்வந்து தானே
உமக்கு வெளிப்படுமே " (16)

'வருகின்ற இரவலர்க்கு நொய்யிற் பிளவு அளவேனும் பகிர்ந்தளிமின்' என்று அறிவுறுக்கும் அருணகிரியார், 'கையிற் பொருளும் உதவாது காணும் கடைவழிக்கே' (18) என்று உறுதி கூறுகின்றார். அழகு முருகனுக்குச் செய்யும் அலங்காரத்தினுள்ளும் உலகமாந்தர் நல்வாழ்வை மறவாத இம்மாக்கவிஞரது இதய விரிவை என்னென்றெடுத்துரைப்பது! மக்களது பொருள் மேற்கொண்ட கடும்பற்றுள்ளத்தைப் பலவாறு கண்டிக்கும் இவர், பெண்கள் மேற்கொள்ளும் பெரு விருப்பமும் இறைவன் பாற் கொள்ளத்தக்க பேரன்புக்கு ஒரு தடையாக இருப்பதனை உணர்கின்றார். 'பால் என்பது மொழி; பஞ்சென்பது பதம்; பாவையர் கண் சேல்' (30) என்றெல்லாம் கூறித்திரிந்து கொண்டே சென்றால், செவ்வேளருளைப்பெறுவது அரிதே என்று நிறுவுகின்றார். 'சித்ர மாதர் அல்குற் படத்திலும், கழுத்திலும், பழுத்த செவ்வாயிலும், பணைத்த தோளிலும், உந்தித் தடத்திலும், கிடக்கின்ற வெங்காம சமுத்திரம்' (29) வற்றினாலன்றி வாழ்வில்லை என்று உணர்த்துகின்றார். உலகத்திற் பலர் வாழ்வு பொருள் தேடுவதிலேயே கழிந்துவிடக் காண்கின்றோம் அன்றோ ?

(தொடரும்)

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப. நீலா

( மலர் 29, இதழ் 1, பக்கம் 39 இன் தொடர்ச்சி )

## 25. பழியஞ்சினது

செழியன் இராஜசேகரனின் அன்பிற்கு எளியவனாகி இறைவன் மன்றுள் மாறியாடிய ஆடல் கண்டோம். இனிக் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் நடந்த ஓர் அற்புதத்தைக் காண்போம்.

எண்ணற்ற மனைவி மக்களோடு நீதிவழுவாது ஆளும் குலோத்துங்கனின் ஆட்சியில் திருப்புத்தூரிலிருந்து தன் இளைய மனைவியுடனும், அவளது குழந்தையுடனும் மதுரைக்கு வந்த மறையவன் ஒருவன் தாகத்தால் வருந்திய மனைவியைக் குழந்தையுடன் வழியிலிருந்த ஆலின் நிழலில் அமரச்செய்து, தான் நீர் தேடிவரச் சென்றான்.

### பிணமானாள் பார்ப்பனி :-

அந்த ஆலமரத்தின் மேல் கிளையில் எப்போதோ யாராலோ எய்யப்பட்டுக் கோப்புண்டிருந்த ஓர் கணை காற்றால் அலைப்புண்டு கீழேயிருந்த பார்ப்பனியின் வயிற்றில் தைத்தது. ஈன்றோளை நீத்த குழவி அலறியது. சிவந்த கண்களும் செவ்வாளி பூட்டிய சிலையுமாக ஒரு வேடன் அந்த ஆலின் நிழலில் வந்தொதுங்கினன்.

### பழி இங்கே பாவம் எங்கே :-

தண்ணீர் தேடிச் சென்ற மறையவன் நீரோடையொன்று கண்டு நீர் மொண்டுவருகிறான். ஆலின் கீழே அழுது துடிக்கும் சேயைக் கண்டான். அதன் அருகே அசையாத ஓவியமாய்க் கிடந்த மங்கல விளக்கைக் கண்டான். மனம் மருண்டான்

அயில் போன்ற கணை தன் மயில்போன்ற மனைவியின் வயிற்றுள் தைத்திருப்பது பார்த்துத் துடித்தான். மத்தெறி தயிர்போலக் கலங்கினன். பின்பு ஒருவாறு தெளிந்து இத்தகைய பெண் பழியை யார் ஏற்றார் என ஆராயத் தொடங்கினன். ஆலின் அயலில் அச்சம் தருகின்ற தோற்றத்தோடு வில்லும் அம்புங் கைக்கொண்டிருந்த வேடனைக் கண்டான். காப்பணி தாளனை, வாளொடு விக்கிய கச்சாளனை, கூர்ப்பகழிக் கோல்கொண்ட வில்லாளனை அவன் இருக்கவே இவனே என் பார்ப்பனியைக் கொன்றவன் என்று தீர்மானித்து, 'ஏடா, வேடா! என்மனைவியைக் கொன்ற மாபாவியே! வா என்னுடன்; அரசனிடம் உன்னைக் கொண்டுசென்று இதற்கு நீதிகேட்பேன் - என்று கூறிக்கொண்டு மன்னவன் ஆணை என்ற பாசத்தால் அவனைப் பிணித்துக் கொண்டு செல்கிறான்.

மாண்ட மனைவியை முதுகிலிட்டு, தாய்ப்பால் விரும்பி யழும் மகவை இடையில் சுமந்து மன்னனின் மதுரையை வந்தடைந்தான் மறையவன்.

## செங்கோலின் சீர்மை இதுவோ :

தாய்முலை வேட்டழும் சேயைக் காண்தொறும் கண்கலங்கும் அந்தணன் குற்றமற்ற வேடனைத் தன் முன் நிறுத்திக்கொண்டு மனைவியின் உடலை அரண்மனை வாசலில் இட்டு நீதிகேட்கிறான்.

கோமுறை கோடாக் கொற்றவ ரேறே முறையேயோ !
தாமரை யாள்வாழ் தண்கடி மார்பா முறையேயோ !
மாமதி வானோன் வழிவரு மைந்தா முறையேயோ !
தீமைசெய் தாய்போற் செங்கை குறைத்தாய் முறையேயோ !

முறைதவறு மன்னனே! மதிவழிவரு மைந்தனே! தீமை செய்யாதபோதும் தன் கையைக் குறைத்து நீதியைக் காத்த பாண்டியன் உனது மரபின் முன்னோன். அரசன் உறங்கும் போதும் அவனொளி உலகம் காக்கும் என்ற வார்த்தை இப்போது பொய்யாயிற்றே. இந்த வேடன் கொலைத் தொழிலைச் செய்யும்போது அரசநீதி அவனை ஒன்றும் செய்யவில்லையே என்றெல்லாம் பலவாறு புலம்புகிறான்.

மந்திரச் சுற்றத்தார் மன்னனிடம் இச்செய்தியைத்தெரிவிக்கிறார்கள்; மன்னன் குலோத்துங்கன், 'என் காவல் மிக அழகிது! ஐந்து பயம் (அரசன், பரிசனம், பகைவர், கள்வர், பறவை விலங்குயிர்கள்) தீர்த்து ஆளும் ஆட்சி இதுவோ' என்று புலந்து புறம் வந்தான்.

### சிந்தித்தான் செழியன் :—

அந்தணான் தன் துயரை எடுத்து விளம்பினன். அயல் நின்ற வேடனே தான் ஒரு பாவமும் அறியாதவன் என்பதனை விளங்கக் கூறினன். அருகிலே நின்றவர்களில் சிலர் இத் தறுகண்மையாளன் பொய்தவிர மெய் புகலுவானே? ஆகவே, நன்கு ஒறுத்து உண்மை மொழியை வரவழைக்க வேண்டும் என்று உபாயங் கூறினர். இதற்குப் பாண்டியனும் இசைவுதர, வேடனே தான் கூறியதையே திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தான். பின்பு அரசன் சிந்தித்தான் - இவ்வேடனுடைய தோற்றத்தை மட்டும் கண்டு இவனைக் கொலையாளி என்று முடிவுகட்டக்கூடாது. ஒருகால் இவன் அதனைச் செய்யாமல் வழியில் வந்த பிறர் செய்திருக்கலாம். எதற்கும் சிந்தித்து முடிவு காணவேண்டும் என்று கருதி வேடனைச் சிறையிலடைக்க உத்தரவிட்டான். நூல் வல்லாரை யழைத்து இவ்வழக்கை ஆராய்ந்தான். அவர்களாலும் சரியான காரணத்தை ஆராய இயலவில்லை. அந்தணனை மனைவிக்கு ஈமக்கடன் முடிக்க ஏவிய பிறகு, குறை நீக்கும் கொற்றவனுகிய கண்ணுதல் மேவிய கோயிலை நண்ணினன்.

### பழிக்கு அஞ்சிய பரம்பொருள் :—

பாண்டியனின் மனக் கலக்கத்தைத் தெளிவிக்காவிடில் தன் மேல் பழிவரும் என்றுணர்ந்த பெருமான் ஓர் அசரீரியாக ஒலி காட்டினர், இத்திருநகரின் புறத்தே வணிகர் தெருவில் நடக்கும் திருமணத்திற்கு அவ்வந்தணனுடன் அரசன் வரவேண்டும் என அசரீரி மொழிந்தது. அதன்படி மாறுவேடம் பூண்ட மன்னவன் வணிகரின் இல்லத்தின் ஒரு பக்கத்தில் இருளில் மறைந்து நின்றான். அங்கே வந்த இயமனின் தூதர்கள் பேசிய வார்த்தை இறைவனருளால் இவர்கள் செவியில் பட்டது.

இம் மணமகனின் உயிரைக் கவர நம் தலைவன் ஆணையிட்டுள்ளானே! இவனுடம்பிலோ பிணி ஏதும் இல்லையே! அப்படியிருக்க இவனைக் கொல்வது எப்படி என ஒருவன் கேட்க, மற்றவன் பதிலுரைக்கின்றான்.

ஆலமரத்தில் கோப்புண்டிருந்த அம்பைக் காற்றால் விழ வைத்துப் பார்ப்பனியின் உயிரை நாம் கவரவில்லையா! இங்கேயும் ஓர் உத்தி செய்வோம். இங்கே கட்டப்பட்டிருக்கும் கன்றீன்ற பசுவை மணப்பறை யோசையில் வெருள வைப்போம்.

அப்பசு மணமகனின் வயிற்றில் முட்டி அவனைக் கொல்லும் என்றான்.

அரசன் மனம் தெளிந்தான் - அருகிருந்த அந்தணனே இச்செயல் இப்படியே இங்கு நிகழுமானால் என் மனைவியிறந்த வகையை நான் நம்புகிறேன் என்றான்.

**நினைத்தது நடந்தது:-**

ஒட்டிய பல்கினை துவன்றி ஒல்லொலி மங்கலந் தொடங்கக் கொட்டிய பல்லிய ஓசைகேட்டுப் புனிற்று வெருவியது. கட்டியிருந்த தாம்பிலிருந்து விடுபட்டு விரைந்து வந்து மணமகனை முட்டியது. மணமகன் மாண்டான் - மணப்பறை பிணப்பறையாயிற்று.

கண்ட அந்தணன் தனது துன்பத்தைவிட இதனையே பெரிதாகக் கருதி வருந்தினன். தன் மனைவி இறந்தவிதம் தெளிந்தான்.

அரண்மனை மீண்ட அரசன் வேடனைச் சிறையிலிருந்து விடுவித்து, வேண்டும் பொருள் கொடுத்து தன் பிழை பொறுக்க வேண்டினன். அந்தணனுக்கும் அளவிறந்த செல்வத்தைக் கொடுத்து மீண்டும் மணம் முடித்துக்கொள்ள ஆசிகூறி அனுப்பி வைத்தான்.

மதுரைப் பெருமானை வந்தித்து வாழ்த்தினன். ஆதரம் பெருகப் பாவியேன் பொருட்டு நீர் பழியஞ்சிய சொக்கராக மாறியருளிய தென்னனே என்று மனம் பொருந்தத் துதித்தான். தன்னுயிர் போல மன்னுயிர் காக்கும் செங்கோல் தாங்கி, நீண்ட காலம் பார்புரந்தான் பாண்டியன் குலோத்துங்கன்.

(வளரும்)

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakateswaraswamy Devasthanam, Tirucadayur.

ஆதீனத்தாரின் சிறப்பான நிர்வாகத்திற்கு நன்றி. நமது சமயம் வளம் பெற்று ஓங்கச் செய்யும் செய்கையில் முக்கியமான தொண்டு ஆதீனம் ஆற்றும் சேவை.

(ஒம்) வி. தி. சம்பந்தன்
MALAYSIA

## தமிழ்நாடு

# தெய்வீகப் பேரவைத் தலைவர்

தென்னாடு சிவமணம் கமழும் திருநாடு. தொன்றுதொட்டு இந்நாட்டில் பரவியிருக்கும் மக்கள் பண்போடு ஊறிக் கலந்த சமயநெறி அனைத்துலகும் போற்றும் அரிய திருநெறியாகும். மனிதனைத் தெய்வமாக மாற்றும் இச்சமய நெறியைப் பேணிக் காத்து மக்களை நல்வழிப்படுத்த இறைவன் தென்னாட்டில் கயிலாய பரம்பரையில் பல ஆதீனங்களைத் தோற்றுவித்துள்ளான். அவ்வுபதேச பரம்பரையில் வரும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானங்களும் மடாதிபதிகளும் ஒருங்கிணைந்து தெய்வீகப் பேரவையைத் தோற்றுவித்து சமய வளர்ச்சி காண நல்ல பல திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்தி வருவதை அனைவரும் அறிவர்.

தெய்வீகப் பேரவையை உருவாக்கி அதன் வழிமுறைத் திட்டங்களை வகுத்துத் தந்து அப்பேரவையின் தலைவராக மும்முறை இருந்து விளக்கம் பெறச் செய்தவர்கள், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள். இவ்வாண்டு இப்பேரவையின் தலைவராக குன்றக்குடி மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (குன்றக்குடி அடிகளார் M. L. C.) அவர்களை ஒருமனதாக அனைவரும் தேர்ந்தெடுத்திருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

குன்றக்குடி அடிகளார் தருமைதந்த தவச்செல்வர்; நாடு முழுதும் சென்று மக்களுக்கு நல்வழி காட்டிவருபவர்கள். சமய உலகில் துடிப்போடு எழுதியும் பேசியும் பல்லாயிரக் கணக்கான மக்களைச் சமய நெறிப்படுத்திவருபவர்கள். நாவலராய்ப் பாவலராய் நல்ல எழுத்தாளராய் இளைஞர்கள் முதல் பெரியோர்கள் வரை எல்லோரையும் ஈர்க்கும் சொல்லாற்றல் பெற்றவர்கள். தமிழகம் முழுதும் அருள்நெறி மன்றங்கள் தோற்றுவித்துப் பக்தி இயக்கத்தை வளர்ப்பவர்கள். அரசியலில் மக்கள் மன்ற உறுப்பினராக இருந்து சமயநெறி புரந்து வருபவர்கள். இவர்கள் இம்முறை பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதைப் பாராட்டுகிறோம். இவர்கள்

தலைமையில் பேரவை நல்ல பல ஆக்கப் பணிகளைச் செய்ய இருக்கிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பேரவைக் கூட்டம் 21—12—69, 22—12—69 ஆகிய இரு நாட்களிலும் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான திருவிடைமருதூர் கட்டளை மடத்தில் கூடியது. திருவாவடுதுறை ஆதீனம் மகாசந்நிதானம் அவர்கள் மிகச் சிறந்த முறையில் பேரவைக் கூட்டத்திற்கு அனைத்துஏற்பாடுகளையும் செய்தருளியிருந்தார்கள். தமிழகத் திருமடங்களின் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும் மடாதிபதிகளும் எழுந்தருளி பேரவையின் ஆக்கப்பணிகளைப்பற்றிப் பல திட்டங்களை வகுத்தருளினார்கள். தமிழக அறநிலயத்துறை அமைச்சர் மாண்புமிகு, கே.வி.சுப்பையா அவர்கள் கலந்துகொண்டு நல்லபலகருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்கள். திருவாவடுதுறைஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் முன்மொழிய குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பேரவைத் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.

மூன்றாண்டுகளாகத் தெய்வீகப் பேரவைத் தலைவராக இருந்து நல்லமுறையில் பேரவையைச் செயற்படுத்தியருளிய தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கட்கு குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வெள்ளியினால் செய்த வேலைப்பாடமைந்த செங்கோலை வழங்கித் தம் நன்றியறிதலைப் புலப்படுத்திக்கொண்டார்கள்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Arunajateswaraswami Devasthanam, Tiruppanandal.

**இன்று இவ்வாலயத்திற்கு வந்து தரிசிக்கும் வாய்ப்பு கிட்டியது. பொதுவில் தருமபுரம் ஆதீனம் கோவில்கள் நல்ல முறையில் வைக்கப்பட்டிருப்பினும், இவ்வாலயம் மிகவும் சீரிய முறையில் வைக்கப்பட்டிருப்பது பாராட்டுதற்கும் மகிழ்ச்சிக்கும் உரியதாகும்.**

Sd. மா. மு. சந்திரகாசன்
**மாவட்ட வினியோக அலுவலர்**
**தஞ்சை.**

**28—12—69**

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான், முதுபெரும்புலவர்.

**திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.**

( மலர் 29, இதழ் 1. பக்கம் 748 இன் தொடர்ச்சி )

மாணுக்கன் : இப்பொழுது விளக்கியது முடிந்த முத்தியாயின், இதற்கு முன்னேயும் சில சித்தாந்த முத்திகள் உளவோ ?

ஆசிரியர் : ஆம்! உள. அவை, அபரமுத்தி, பதமுத்தி, சீவன்முத்தி' என்பனவாம். இவற்றோடு மேற்கூறிய பரமுத்தியையும் சேர்க்கச் சித்தாந்த முத்தி நால்வகைப்படும் என உணர்க.

## அபரமுத்தி

மாணுக்கன் ; அங்ஙனமாயின், அபரமுத்தியாவது யாது ?

ஆசிரியர் ; தத்துவங்கள் அனைத்திலும் கீழ்ப்பட்ட தத்துவமாகிய பிருதிவி தத்துவத்திலும் பூவுலகிற்கு மேல் உள்ள புவர்லோகம், சுவர்லோகம் முதலிய உலகங்கள் யாவும் புண்ணிய உலகங்களே. அதனால் அவை அனைத்தும் 'பதவிகள்' என்னும் பெயருக்கு உரியனவாம். ஆயினும் பிரகிருதி தத்துவத்தைக் கடவாதவரையில் முக்குணமாகிய மயக்கம் நீங்காமையால், பிற சமயங்கள் அவற்றையே 'முத்தியுலகம்' எனக் கூறினும், சைவ சமயம் அவற்றை, 'பந்த உலகம்' என்பதன்றி, 'முத்தியுலகம்' எனக் கூறுதல் இல்லை. ஆகவே, மால், அயன், இந்திரன் உள்ளிட்ட தேவர் பதங்களைச் சைவ சமயம், 'முத்தியுலகம்' எனக் கூறுதல் இல்லை. இவரெல்லாம் மும்மலம் உடைய சகல வருக்கத்தினராய் வினைவழிப் பிறக்கும் பிறப்பினுள் புண்ணிய மிகுதியால் தேவராய்ப் பிறந்தோர். ஆகவே அப்புண்ணியம் தீர்ந்தவுடன் வினைக்கீடாகப் பிற பிறவியினும் செல்லுதற்குரியர். பக்குவம் பெறின், முன்னைப் பிறவிகளிலும், இத்தெய்வப் பிறவியிலும் செய்த சிவபுண்ணிய மிகுதியால் இவர்கள் இருவினையொப்பும் சத்திநிபாதமும் உடையவராயின் இப்பிறவியிலே ஞானசிரியரால் ஞானம் பெற்று வீடுபெறுவர். அல்லது அடுத்த

பிறவியில் சிறந்த மக்களாய்ப் பிறந்து அவ்வாறு வீடுபெறுவர். இவ்வகையில் மாயோன் கண்ணனைப் பிறந்திருந்த காலத்தில் உபமன்னிய முனிவரால் ஞானம் பெற்ற வரலாறு கூறப்படு கின்றது. ஆகவே, மாயோன் முதலிய சகல வருக்கத்தினர் வாழும் பதங்கள் எல்லாம் முத்தியுலகங்கள் அல்ல. மற்று, சகலருக்கு மேற்பட்ட பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்பவர் வாழும் உலகங்களே முத்தியுலகங்களாம். ஏனெனில், பிரளயா கலர் முக்குணங்களின் நீங்கினவராதலாலும், விஞ்ஞானகலர் விருப்பு வெறுப்புக்களின் நீங்கினவராதலாலும், அவர் வாழும் உலகங்களில் அவை இல்லாமையால் என்க. இனிக் குணிருத் திரர் சகலவருக்கத்தினராயினும் சிவபுண்ணியத்தால் சிவனை உணர்ந்து அவனது உருவும், பெயரும் தொழிலும் பெற்றமை யால் அவரது உலகமும் முத்தியுலகம் எனப்படும்.

பிரகிருதிகாறும் உள்ள தத்துவங்களில் உள்ள பதவிகட்கு மால், அயன், இந்திரன் முதலியோர் புண்ணிய மிகுதியால் தலைவர்களாய் இருப்பர். பிரகிருதிக்கு மேற்பட்ட தத்துவத்தில் உள்ள பதவிகட்குச் சிவபுண்ணிய மேலீட்டால் பக்குவமுற்றுச் சிவஞானத்தைப் பெற்ற சீகண்ட உருத்திரர், அனந்ததேவர், மந்திரமகேசுரர், அணுசதாசிவர் என்போர் தலைவர்களாய் விளங்குவர். இவர்களில் சீகண்ட உருத்திரர் ஒருவர் மாத்திரம் பிரளயாகலருள் பக்குவம் பெற்றுச் சிவஞானம் கைவரப்பெற்ற வர். ஏனையோர் விஞ்ஞானகலருட் பக்குவம் பெற்றுச் சிவஞானம் பெற்றவர்கள். இவர்கள் சிவஞானத்தால் மலம் நீங்கப்பெற்ரு ராயினும் மலவாசனை நீங்கப்பெருமையால் அதிகாரத்திலும். போகத்திலும் சிறிதே இச்சையுடையராய் இருப்பர். அதனல், இவர்கள் மேற்கூறிய தலைமையைப் பெற்றுப் புவனபதிகளாய் விளங்குவர். ஞானத்தால் பெற்ற உரிமை காரணமாக இவ ரெல்லாம் தடத்த சிவனேடொத்த உருவும், பெயரும், தொழி லும் உடையராயினும், ஆன்ம வருக்கத்துட்பட்டவர்களே. ஆன்ம வருக்கத்துட்பட்டவராய் இந்நிலைகளைப் பெற்றவர்களே. 'அணுபட்சத்தினர்' எனச் சொல்லப்படுகின்றனர். பரமசிவன் தடத்தநிலையில் கொள்ளும் சதாசிவன், மகேசுவரன், வித்தியே சுரன், உருத்திரன், மால், அயன் என்னும் நிலைகள், 'சம்புபட்சம்' எனப்படுவனவாம். அணுபட்சத்தினர் தம் தம் அதிகார எல்லைக்கு உட்பட்டு வாழும் ஆன்ம கோடிகட்குப் படைத்தல் முதலிய ஐந்தொழில்களையும் செய்வர். அவற்றுள் அருளலை ஆசான் மூர்த்தியாய் உடனிருந்தே செய்வர். விரையத் தோன்றி மறையும் அருட்டிருமேனியாலும், உயிர்க்குயிராய் உண்ணின்று உணர்த்துதலானும் குறையின்றி நிரம்பிய ஞானத்தை அருளு

பவன் பரமசிவன் ஒருவனே. அப்பரமசிவனோடு இரண்டறக் கலக்கும் நிலையாக மேற்கூறப்பட்ட முத்தியே பரமுத்தி. அஃதல்லாது, அணுசதாசிவர், மந்திரமகேசுரர், அனந்ததேவர் என்பவரது உலகங்களை அடைந்து நிற்றல் அபரமுத்தியாம். 'இவரெல்லாம் சுத்தமாயையில் தோன்றிய சுத்த தத்துவ புவனங்களில் வாழ்பவர்' என்பது முன்பே கூறப்பட்டது. ஆகவே, சுத்த தத்துவ புவனங்களே அபர முத்தித் தானங்கள் என்பது விளங்கும்.

## பதமுத்தி

மாணுக்கன் : பதமுத்தி என்பது யாது ?

ஆசிரியர் : மேற்கூறிய சீகண்ட உருத்திரர் உலகத்தை அடைதலே பதமுத்தியாம். குணருத்திரர் உலகத்தை அடைதலும் ஒருவகைப் பதமுத்தியேயாம்.

## அபரமுத்தி பதமுத்தி வகைகள்

மாணுக்கன் : அபரமுத்தி பதமுத்திகள் முடிந்த முத்தியல்லவாகலின், அவை தனித்தனி ஒன்றோ, பலவோ ?

ஆசிரியர் : பலவேதாம்; ஒன்றல்ல. ஏனெனில், அபர முத்தித் தானங்களும், பதமுத்தித் தானங்களும் ஒன்றல்ல; பல என்பது வெளிப்படையாதலின். மேலும், அத்தானங்களில் அடையும் நிலைகளும் பலவாம். அவை, 'சாலோகம், சாமீபம், சாரூபம்' என மூன்றுவகைப்பட்டிருக்கும்.

## சாலோகம்

மாணுக்கன் : சாலோகமாவது யாது? மேற்குறித்த அபர முத்தி, பதமுத்தி உலகங்களில் சென்று எங்கும் தடையற இயங்கும் உரிமையைப் பெற்றிருத்தலே 'சாலோகம்' என்னும் முத்தி நிலையாம். ஒருவர் இல்லத்தில் பணி புரியும் அகம்படிமைத் தொண்டர் அவ்வில்லம் முழுவதும் தடையறச் செல்லும் உரிமை போன்ற இவ்வுரிமையைத் தருவது சரியைத் தொண்டு. அது பற்றியே அது, 'தாச மார்க்கம்' அடிமைநெறி எனப்படுகின்றது.

## சாமீபம்

மாணுக்கன் : சாமீபமாவது யாது ?

ஆசிரியர் : மேற்கூறிய முத்தி உலகங்களில் பணியாளர் போல அகலநில்லாது. மைந்தர்போல அவ்வப்புவன பதிகளை அருகணைந்து நிற்கும் உரிமையைப்பெற்றிருத்தலே 'சாமீபம்' என்னும் முத்திநிலையாம். இவ்வுரிமையைத் தருவது கிரியைத் தொண்டு. அதனால் அது, 'சற்புத்திர மார்க்கம் - மகன்மை நெறி' எனப்படுகிறது.

## சாரூபம்

மாணாக்கன் : சாரூபமாவது யாது?

ஆசிரியர் : மேற்கூறிய புவனபதிகளை அருகணைந்து நிற்றலோடு அமையாது அவர்களோடு ஒத்த உருவம், பெயர் முதலியவற்றை உடையராய்த் தோழர்போல நெருங்கி அளவளாவும் உரிமையைப் பெற்றிருத்தலே 'சாரூபம்' என்னும் முத்தி நிலையாம். இவ்வுரிமையைத் தருவது யோகம். அதனால் அது 'சகமார்க்கம் – தோழமைநெறி' எனப்படுகின்றது.

## அபர சாயுச்ச பதசாயுச்சங்கள்

மாணாக்கன் : அபரமுத்தியிலும், பதமுத்தியிலும் சாயுச்சம் இல்லைபோலும்!

ஆசிரியர் : உண்டு. அவ்வப் புவனபதிகளோடு ஒத்த உருவம் முதலியவற்றைப் பெற்றிருத்தலோடு அமையாது அவர்கள் ஆணையின்வழி அவர்கள்போலவே அவரது அதிகாரங்களைப் பெற்றிருத்தலே அபர சாயுச்ச பதசாயுச்சங்களாம். சாயுச்சத்தைத் தருவது ஞானமே. இதுவே பெரும்பேறுகளின் இதனைத் தரும் ஞானம், 'சன்மார்க்கம் – நன்னெறி' எனப்படுகின்றது.

## சாலோகம் முதலியவற்றிற்கு உரியோர்

மாணாக்கன் : மேற்கூறிய பலவகை முத்திகளுள் யார் யார் எவ்வெவற்றைப் பெறுவர்?

ஆசிரியர் : பொதுவும், சிறப்பும் ஆகிய சிவபுண்ணியங்களை - அஃதாவது சரியை, கிரியை; யோகங்களை உபாய முறையால் செய்வோர் தாம் விரும்பிய இவ்வுலகப் பயன்களைப் பெறுதலுடன் உருத்திர உலகங்களில் சாலோகம் முதலியவற்றைப் பெறுவர். அப்புண்ணியங்களை உண்மை முறையாற் செய்வோர் சிகண்ட உருத்திரர் உலகத்தில் சாலோகம் முதலிய

வற்றைப் பெறுவர். சரியை முதலிய மூன்றும் சரியையிற்சரியை சரியையிற் கிரியை முதலாகப் பலபட நிகழ்தலின், அவற்றிற்கு ஏற்ற உலகத்திலே மேற்கூறிய பயன்கள் பெறப்படும்.

பொதுவும், சிறப்புமாகிய சரியை முதலியவற்றை உண்மை யாற் செய்வோர் சீகண்ட உருத்திரர் உலகத்தில் மேற்கூறிய பயன்களைப் பெறுவர். இவ் இருதிறப் பயன்களும் இனி ஞானத்திற் சரியை முதலியனவாகிய கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்பவற்றை எய்தினோர் சாலோகம் முதலியவற்றை அபரமுத்தி உலகத்தில் பெறுவர் என்க.

## அபரமுத்தி பதமுத்திகளின் தகுதிகள்

மாணாக்கன்: அபரமுத்தி பதமுத்தகளிடையே தகுதி வேறுபாடு என்னை ?

ஆசிரியர்: அபரமுத்தியை அடைந்தோர் மீளப் பிறத்தல் சிறுபான்மை. அதனால், பிறப்பற்றவராகவே எண்ணப்பட்டு, அவ்வுலகத்தினின்றே நிட்டைகூடிப் பரமுத்தியைத் தலைப்படு வர். சிறுபான்மை மீளப் பிறப்பினும் ஆசான் மூர்த்தியை வேண்டாது தீவிர பத்தியுடையராய்ப் பரமசிவன் நேர்படப் பெற்றும் பெருதும் நிட்டைநிலையில் நின்று பரமுத்தியடைவர். அறுபான்மும்மை நாயன்மார் இத்திறத்தினரே என்பது அவர் தம் வரலாறுகள் பற்றி அறிந்துகொள்க.

பதமுத்தியை அடைந்தோர் அங்குநின்றே ஞானத்தைப் பெற்றுப் பரமுத்தியை அடைதல் சிறுபான்மை. அதனால், அவர்கள் பிறப்புடையவராக எண்ணப்பட்டு மீளவும் நல்ல சூழலில் நன்மக்களாய்ப் பிறந்து ஆசான்மூர்த்தி வழியாக ஞானத்தைப் பெற்று அபரமுத்தி பரமுத்திகளை அடைவர். இவையே அவ்விரண்டற்கும் உள்ள சிறந்த வேறுபாடாம்.

## சிவகுமாரர்கள்

மாணாக்கன்: விநாயகர், முருகர் முதலாகச் சிவகுமாரர் களாகச் சொல்லப்படுவோர் யாவர்?

ஆசிரியர்; அவரெல்லாம் பதசாயுச்சம் பெற்றுத் தம் முதல்வர் ஆணைக்கு ஏற்பவும், தம் விருப்பத்திற்கு ஏற்பவும் வேண்டிய உருவும், பெயரும், செயலும் பெற்று இருப்பவர் என்க. பதசாயுச்சம் பெற்றோரை, 'அபர முத்தர்' என வழங்கு தலும் உண்டு என்பது அறிக. (தொடரும்)

# செய்திகள்

## குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 26—12—69 வெள்ளிக்கிழமை குருமூர்த்த ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. குருமூர்த்தத்திற்குக் காலை மாலை இருவேளைகளிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். குருபூஜை விழாவைக் குறித்து கோயில் நான்மணிமாலை என்ற நூல் வெளியிடப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி, கோயில் நான்மணிமாலை என்ற நூலையும் வழங்கியருளினார்கள்.

குருபூஜை விழாவைக் குறித்து குருமூர்த்த ஆலயத்தில் கோயில்நான்மணிமாலை பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும், ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்களும், ஆதீனம் ஸ்ரீகுருஞானசம்பந்தர் உயர் பள்ளித் தமிழாசிரியரும் ஆதீன ஓதுவாமூர்த்திகளும், மன்னன் பந்தல் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்களும் கலந்து கொண்டு சொற்பெருக்கு ஆற்றினார்கள். அன்பர்கள் பலர் சொற்பொழிவுகளைக் கேட்டும், குருமூர்த்த வழிபாடு ஆற்றியும் மகிழ்ந்தனர்.

## திருவெம்பாவைச் சொற்பொழிவு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்ற முறையில் திருவெம்பாவைச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. 31 - 12—69 புதன்கிழமை மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி தேவஸ்தானம். கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி தேவஸ்தானம், திருநின்றியூர் ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவர சுவாமி தேவஸ்தானம் ஆகிய திருக்கோயில்களிலும், 1—1—70 வியாழக்கிழமை பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தி

லும், 2—1—70 வெள்ளிக்கிழமை கொறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி தேவஸ்தானம், விளநகர் ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் சுவாமி தேவஸ்தானம், மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாத சுவாமி தேவஸ்தானம் ஆகிய திருக்கோயில்களிலும், 3—1—70 சனிக்கிழமை திருமுல்லைவாயில் ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி தேவஸ்தானம், குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானம், ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தானம், ஆகிய திருக்கோயில்களிலும், 4—1—70 ஞாயிற்றுக்கிழமை பறியலூர் ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்திலும், 5-1-70 திங்கட்கிழமை தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீஸ்வரசுவாமி தேவஸ்தானத்திலும் திருவெம்பாவைச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

தருமை ஆதீனக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், திருநெறிச் செம்மல், நல்லிசைப்புலவர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும், ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்களில் தருமை ஆதீனப்புலவர், மகாவித்துவான், முதுபெரும்புலவர், சித்தாந்தக்கலைமணி, திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும், வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன் அவர்களும், மன்னன்பந்தல் அ. வ. அ. கல்லூரி விரிவுரையாளர்களில் செஞ்சொற்கொண்டல், வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் M. A., அவர்களும், திரு. அ. பாலசுவாயன் M. A., அவர்களும், தருமை ஆதீனம் ஸ்ரீகுருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. வே கண்ணப்பன் அவர்களும் கலந்து கொண்டு "பாவை நோன்பு" "திருவெம்பாவை" "பாவையும் பள்ளியெழுச்சியும்" "மார்கழிநீராடல்" என்ற தலைப்புக்களில் சொற்பெருக்கு ஆற்றினர். அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

## பாவை மாநாடு

*சீகாழியில் :*

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் 24—12—69. 25—12—69. ஆகிய இரு நாட்களிலும் பாவை மாநாடு மாலை 6 மணிமுதல் தொடங்கி சிறப்புற நிகழ்ந்தது. 24—12—69 புதன்கிழமை யன்று நிகழ்ந்த மாநாட்டில் தஞ்சை அறநிலையத்துறைத் துணை ஆணையர் திரு. T. N. சிங்காரவேல் B. A., B. L, அவர்கள் சிறப்புரை ஆற்றினர்கள். பாவைப் பாடல்களின் பயனையும் பாவை நோன்பின் சிறப்பையும் விளக்கி

பாவை மாநாடு எல்லாத் திருக்கோயில்களிலும் நிகழ்வதால் ஆங்காங்கு உள்ள மக்கள் பாவைப்பாடல்களின் பொருளை நன்கு உணர முடிகிறது என்பன போன்ற பலகருத்துக்களைத் தமது சிறப்புரையில் விளக்கினார்கள். அடுத்து திருச்சி தேசியக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்கள் திரு R. இராதாகிருஷ்ணன் M. A., " இவையும் சிலவோ " என்ற தலைப்பிலும். திரு. சோ. சத்தியசிலன் M. A., " பாவைப்பயன் " என்ற தலைப்பிலும். 25—12..69 வியாழக்கிழமை திருவாசகமணி திரு. K. M. பால சுப்பிரமணியம் B. A., B. L., அவர்கள் "திருமுறையும் திவ்ய பிரபந்தங்களும் " என்ற தலைப்பிலும், மன்னன்பந்தல் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் செஞ்சொற் கொண்டல் திரு. சொ. சிங்காரவேலன் M. A.. அவர்கள் " திருப்பள்ளி யெழுச்சி " என்ற தலைப்பிலும் சொற்பெருக்காற்றினார்கள். சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறி உடனிருந்து மாநாட்டைச் சிறப்புற நிகழ்த்துவித்தார்கள். அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagadeswaraswami Devasthanam, Tirucadaiyur.

A really magnificent temple that brings out all the religious ordour. The renovation has been done really well without sacrificing any artistic aspect. The management has to be congratulated for maintaining the premises clean and tidy. I wish them all well.

(Sd ) G. V. Rao,
Supt. G. Police, Mysore
State Vigilent Commission
Bangalore.

2—1—70.

# எதிர்காலம்

திரு. K. முத்துஜோதிடர்

( சௌமியஸு தைமீ 1உ முதல் 29உ முடிய )

( 14—1—70 முதல் 11—2—70 முடிய )

சௌம்யஸு தைமீ 1உ புதவாரம் (14—1—70) சுக்ல சப்தமியும் ரேவதி நக்ஷத்திரமும் சிவநாமயோகமும் கூடிய சுபதினத்தில், உதயாதி 1 நாழிகை 16 விநாடிக்கு, மகர லக்கினத்திலும், வாராதிபர் புதகால ஹோரையிலும், லாப வேளையிலும், மகர சங்கராந்தி உத்தராயண பிரவேசம், ஸ்ரீ லோகரக்ஷகராயும் திரிமூர்த்தி ஸ்வரூபியாயுமான சூரியபகவான் பிரவேசம் செய்கிறார். ஷை சுபமான பிரவேச கால பலத்தால் உலகெங்கும் சுபிக்ஷமும், தனதான்ய விருத்தியும் நித்திய மங்களமும் உண்டாகி பிரஜைகள் சந்தோஷமடைவார்கள். அன்றையதினம் உதயாதி 10 நாழிகைக்குமேல் 11¼ நாழிகைக்குள் (காலை 10½ மணிக்குமேல் 11 மணிக்குள்) சங்கரமண பூஜை நடத்த உத்தமவேளை. சுபமுண்டாகும்.

**1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். ஜீவனம் விருத்தியாகும். கைத்தொழில் ஓங்கும். ஆரோக்யம் உண்டுபண்ணும். வரவு செலவு சமமாகும். சிப்பந்திகளால் சிரமம் ஏற்படும். உத்தியோகத்தில் இடம் மாறல் ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

**2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½**

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். ஸ்திரமில்லாத ஜீவனமும் வாழ்கையும் தரும். குடும்பத் தொல்லைகளாலும், வியாதிகளாலும் அதிகமான செலவுகள் ஏற்படும். வரவு செலவு சமமாகும். தெய்வபலம் முன்னின்று காக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

**3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனேத்தரும். வியாதி குணமாகும். ஆரோக்யம் உண்டாகும். நண்பர்களால் விசேஷ நன்மை ஏற்படும். தொழில் ஓங்கும். வரவு செலவு சமமாகும். குடும்பத் தொல்லே அதிகமாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்**

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தையே தரும் விவசாயத்தில் இதுவரையில் கண்டிராத விசேஷ லாபம் ஏற்படும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். சுப சோபனுதிகளும் காரியசித்தியும் ஏற்படும். மேலோர் பெரியோர்களின் ஆசிகள் கிடைக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼**

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனேத்தரும் ஆரோக்யம் உண்டுபண்ணும். ஜீவனவிருத்தி ஏற்படும் குடும்பம் ஓங்கும். வரவு செலவ சமமாகும்; அதிகமான உழைப்பு ஏற்படும். மனம் கவலேயுடன் இருந்துபிறகு சாந்தி ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½**

கன்னியாராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனேத்தரும். தனதான்ய விருத்தியும், நஷ்டமான பொருள்வரத்தும் விசேஷ கௌரவமும் ஏற்படும். மத்திய காலங்களில் கொஞ்சம் ஆரோக்யக் குறைவும், சமானமான அந்தஸ்து உடையவர்களால் சிரமமும் காட்டும். வைத்தியச் செலவும் எதிர்பாராத செலவும் ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**7. துலாம் - சித்திரை ½ சுவாதி - விசாகம் ¾**

துலாராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத்தரும். தனதான்ய விருத்தி ஏற்படும். தொழில் உத்தியோகம் எல்லாம் மேன்மை அடையும். எதிர்பாராத லாபங்களும் உலக பிரசித்தியும் உண்டுபண்ணும். தெய்வபலம் சுபத்தைத் தரும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

**8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை**

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனேத்தரும். அடிக்கடி இடம் மாறலும், சஞ்சாரமும் ஏற்படும். தொழில் ஓங்கும். இல்லறசுகம் உண்டாகும். வரவு செலவு சமமாகும். புதன், வியாழன் சுபமாகும்.

**9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼**

தனூர்ராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். ஸ்த்ரீகளால் சிரமம் ஏற்படும். குடும்பத்தொல்லை அதிகமாகும். புத்திராதிகளால் நன்மை ஏற்படும். மனம் சஞ்சலமாகவே இருந்துகொண்டு இருக்கும். வரவு செலவு சமமாகும். இல்லறம் ஒத்து உழைக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

**10. மகரம். ¾ உத்திராடம் - திருவோணம் - அவிட்டம் ½**

மகரராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத்தரும். மேல்பதவி கிடைக்கும். தனதான்ய விருத்தியாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். குடும்பசுகம் ஓங்கும். உலக பிரசித்தி ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**11. கும்பம்-அவிட்டம் ½, - சதயம் - பூரட்டாதி ¾.**

கும்பராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத்தரும். சுபசோபனாதிகள் மூலம் சஞ்சாரம் ஏற்படும். ஆரோக்யம் உண்டுபண்ணும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். இடம் மாறுதலுடன் விசேஷமான லாபமும் கிடைக்கும். குடும்பம் ஓங்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.**

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையேதரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். ஜீவனம் விருத்தியாகும். பரிசுகள் கிடைக்கும். உலக பிரசித்தி ஏற்படும். தொழில் மூலமாயும் நண்பர்கள் மூலமாயும் நன்மை உண்டாகும். தெய்வபலம் முன்னின்று காக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- தைமீ பிரவேசகால பலத்தால் ஷை மாதம் வரக்கூடிய நவதான்யங்களும், காடுமேடு பள்ள பகுதிகள் எல்லாம் இதுவரை கண்டிராதபடி ஏராளமான தான்யங்களைத் தரும். சுபிக்ஷமுண்டாகும். சநிபகவான் அசுவதி நக்ஷத்திரத்தில் சஞ்சரித்துக்கொண்டு குருவுக்கு 7ல் இருப்பதால் அதர்ம பூமிகளில் அநேக ஈதிபாதைகள் ஏற்படும். விலைவாசிகள் குறையாது. அமைதிக் குறைவும் ஏற்படும். தர்ம பூமிகளும் தக்ஷிண தேசமும் (தஞ்சை, திருச்சி) காவேரிதீரம் மிகுந்த சந்தோஷகரமாய் இருக்கும். ஷை பிரதேசங்களில் தெய்வசக்தி பிரகாசிக்கும். சுபமுண்டாகும்.